www.tamilarangam.net

Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම KANNOTTAM

வெளியீடு-28 25 அக்டோபர் 2005 விலை:- 07.00

பாசிசத்திடம் மக்கள் மீதான அதிகாரம் சட்டபூர்வமாக கையளிக்கப் படுமானால் அங்கு சாவுத்தொழிற் சாலைகள் உருவாக்கப்படும். இது வரலாற்றின் அனுபவம்.

# இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் எமது நிலைப்பாடு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா அதிகாரப் பரவலாக்கல், ஜனநாயகம், மனித உரிமைகள், பன்முகத்தன்மை, இலங்கையின் அதிகாரக் கட்டமைப்பை ஜனநாயகமயப்படுத்துவது, மக்களின் சுதந்திரமான ஐக்கியத்தின் ஊடாக இலங்கை என்ற தேசத்தை நிர்மாணிப்பது ஆகிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை வலியுறுத்துகிறது.



எம்மைப் பொறுத்தவரையில் சமகால சூழ்நிலையின் அடிப்படையிலும், வரலாற்று பின்புலங்களின் அடிப்படையிலும், தெளிவான நிலைப்பாடொன்றை எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இன்று இனங்களின் பிரச்சினை ஒட்டு மொத்த நாட்டின் சமூக, பொருளாதார பிரச்சினை. இவை இரண்டுடனும், நெற்றிப் பொட்டில் அடித்தது மாதிரி எம் கண் முன்னே தெரியும், நாளாந்தம் நிகழும் மனித உரிமை மீறல்கள், ஜனநாயக விரோத நடவடிக்கைகள் தொடர்பாக தீவிர அக்கறைக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். நாட்டையும், மக்களையும் நேசிக்கும் கட்சி என்ற வகையில் இவை எமக்கு பெரும் கவலையை ஏற்படுத்துபவையாக அமைகின்றன.

இந்த மனித உரிமை மீறல்களையும், ஜனநாயக விரோத செயற்பாடுகளையும் இன்று பெரும் போக்காக நிகழ்த்திக் கொண்டிருப்பவர்கள் புலிகளே. அவர்கள் வடக்கு-கிழக்கில் ஜனநாயகத்தையும், மனித உரிமையையும் இல்லாதொழிப்பதை மிக நீண்ட காலத்திற்கு முன்னரே ஆரம்பித்து விட்டார்கள்.

வடக்கு- கிழக்கில் புலிகளும், புலிகளின் முகவர்களும் தவிர வேறு எவரும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு மாத்திரமல்ல வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லீம்கள், சிங்களவர்களுக்கும் பொருந்தும்.

இன்று தேசிய அளவில் நாடளாவிய அளவில் வன்முறை அரங்கொன்றை புலிகள் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். அதன் ஓர் அங்கமாகவே இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டார். கதிர்காமரை படுகொலை செய்ததன் மூலம் தேசிய அளவில் பயங்கரவாத வன்முறைகளை கட்டவிழ்க்கும் தமது

தொடர்ச்சி 02ம் பக்கம்

# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஏன் தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும் ?

முதலாவதாக இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் என்பது பல்வேறு இன, மத மக்களினதும் தீர்மானகரமான பங்களிப்புடன் தொடர்புபட்டது. அனைத்துபிரிவு மக்களின் ஆதரவு கிட்டினால்தான் இலங்கையில் ஒருவர் ஜனாதிபதியாக வரலாம்.

இரண்டாவது, எதிர்காலத்தில் ஜனாதிபதி பதவிக்கு வருபவர் அடுத்து வரும் தசாப்தத்தில் இலங்கையின் அரசியல் எதிர்காலத்தில் தாக்கம் செலுத்த கூடிய அதிகாரத்தை கொண்டவராக அமைகிறார். அந்த வகையில் யார் ஜனாதிபதியாக வரவேண்டும் என்பதில் அக்கறை செலுத்துவது முக்கியமான விடயமாகும்.

வெறுமனே புலிகள் சொல்வது போல், அல்லது வேறு வேறு பெயர்களில் இயங்கும் புலிகளின் முகவர் ஸ்தாபனங்கள் சொல்வதுபோல் இந்த தேர்தலை பகிஷ்கரித்து விட்டு, தட்டிக் கழித்து விட்டுச் செல்ல முடியாது. இந்த தேர்தலில் மக்களுக்கு பாரிய பொறுப்புக்கள் உண்டு, ஏனெனில் நாட்டின் எதிர்காலத்தில் மிக முக்கியமான மாற்றங்களை, சாதக பாதக நிலைமைகளை உருவாக்கக் கூடிய அதிகாரம் கொண்ட பதவி இலங்கையின் ஜனாதிபதி முறைமையாகும்.

நாம் ஜே.ஆரின் காலத்தையும், பிரேமதாசாவின் காலத்தையும் கருத்திற்கெடுக்க வேண்டும். அப்போது எமக்கு அது நன்கு புரியும். நாம் 1980, 1983 இனவன்முறைகளை 1980களின் பிற்பகுதியில் நிலவிய இருண்ட யுகத்தை மறந்து விடமுடியாது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை அவர் கிராமப்புறப் பின்புலத்தை மாத்திரமல்ல, சாதாரண சராசரி இலங்கை மக்களின் உணர்வுகளை

# மா:.பியாக்களை தலைவர்களாக ஏற்றுக் கொண்ட சமூகத்தில் என்ன நிகழும்?

*குரு சங்காரம்*

"எழுத்தறிவித்தவன் இறைவனாவன்"
"கற்றார் கண்ணுடையார் கல்லாதார் கண்ணிரண்டில் புண்ணுடையார்"
"தந்தை மகற்காற்றும் உதவி அவையந்து முந்தியிருப்பச் செயல்."
மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல்லெனும் சொல்"
*"மாதா பிதா குரு தெய்வம்"*
*ஆசான்*
*"கல்விக் கண்ணை திறந்தவன்"*





குறுகிய வட்டார சிந்தனை என்ற நத்தை ஓட்டிற்குள் இருந்து திருமகன் காலாதிகாலமாக தமிழர் மத்தியில் செழுமைபெற்று வந்த கல்விப்பாரம்பரியத்தை சங்காரம் செய்யும் நாசகார அழிவு வேலையில் ஈடுபட்டிருக்கிறான்.

வானம் வல்வெட்டித்துறை அளவு என்று சிந்திக்கும் அளவிற்கு தமிழ் சமூகம் சீரழிந்துவிட்டதா என்று அதிர்ச்சி யுறும் அளவிற்கு சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

தமிழ் சமூகம் உலக அளவில் பரந்திருந்தாலும் குறுகிய வடாரத்தின் ... விட்டதா என ஐயுறும் அளவிற்கு நிலைமைகள் மோசமடைந்துள்ளன.

பிரபாகரன் பேசும் அரைகுறைத் தமிழ் கூட வேலுப்பிள்ளை தம்பதியினருடன் வடமராட்சியின் காலஞ்சென்ற ஆசிரியர்களின் பங்களிப்பே.

மானசீகக் குரு துரோணரின் வஞ்சகம் தெரிந்தோ தெரியாமலோ தன் கட்டைவிரலை காணிக்கையாக் கியவன் ஏகலைவன். அங்கு ஒடுக்கப் பட்ட வேடுவன் ஏகலைவனின் ஆற்றல் அவனது கட்டை விரலை காவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கண்ணோட்டம்



# கொலையில்லா தேசம் வேண்டும்

போராட்டம் எப்போதோ சிதைக்கப்பட்டு விட்டது. கொலையும் சிறுவர் சிறுமியரை யுத்தத்திற்கு அணிதிரட்டலும், வரி வசூலும், ஆட்கடத்தலும் மாத்திரமே எமது சமூகத்தில் எஞ்சி நிற்கிறதா என ஐயுறும் அளவிற்கு நிலைமைகள் சீரழிந்து விட்டன என்றே கூற வேண்டும்.

தமிழர்கள் இந்த நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையின மக்கள் என்பதற்காக ஒடுக்கப்பட்ட நிலை கடந்த 60 ஆண்டுகளாக நிலவி வரும் பிரச்சினையாகும். ஆனால் இந்த ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது இந்த நாட்டில் தமிழர்களும், முஸ்லீம்களும், மலையக மக்களும், மலாய், பறங்கி இன மக்களும் சிங்கள மக்களுடன் சமத்துவமாக சரிநிகர் சமானமாக வாழ்வதற்கான நிலைமைகளை தோற்றுவிப்பதென்பதே போராட்டத்தின் நோக்கமாக இருந்தது.

கல்வி, வேலைவாய்ப்பு, தொழில், மொழிப்பயன்பாடு, நிலம், பாதுகாப்பு, நீதி தொடர்பான பிரச்சினைகளில் தீர்வை எட்ட வேண்டியிருந்தது. ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வு என்பதே பரவலாக இலங்கையிலும் உப கண்ட அளவிலும், சர்வதேச அளவிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாக அமைகிறது.

ஒரு சமஷ்டி அடிப்படையிலான ஐக்கிய இலங்கை ஒன்றை கட்டியமைப்பதே இன்று யதார்த்தமானதும், பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுமாகும்.

இதற்கு இந்தியாவின் நெகிழ்வுத்தன்மையான அரசியல் யாப்பு இந்தியாவின் ஆயிரம் மில்லியன் மக்களையும் ஒன்றிணைத்து வைத்திருப்பதற்கான ஒரு சிறந்த பொறிமுறையை கொண்டதாக அமைகிறது. இந்திய சுதந்திரப் போராட்டம் என்ற அத்திவாரத்திலேயே இந்தியா என்ற மாபெரும் தேசம் என்ற உணர்வுக்கு அடித்தளம் இடப்பட்டது.

ஆனால் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் என்பது தலைநிமிர்ந்து யாருக்கும் பெருமையுடன் சொல்லக்கூடிய விதமாக அமையவில்லை. அது உருச்சிதைந்து முழுமையான அராஜகமாக மாறியிருக்கிறது.

தமிழர்கள் இந்த நாட்டில் கௌரவமாக சுயமரியாதையாக வாழ வேண்டுமென எழுந்த போராட்டம் தமிழ் தலைவர்களை கொன்றொழித்து எந்தவித ஆக்கப்பூர்வமான கருத்தும் வெளிவராமல் புலமைத்துவம் சார்ந்தவர்கள் ஒடுக்கப்பட்டு, தமிழர்களுடன் நட்புறவுடன் வாழ்ந்த முஸ்லீம் மக்கள் உடுத்த துணியுடன் தமது வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு சாதாரண சிங்கள மக்களுடன் வைத்திருக்க வேண்டிய் உறவுகளுக்கு பதிலாக அவர்கள் மீது படுகொலைகளை கட்டவிழ்த்துவிட்டு தமிழர்களின் மிதவாதத் தலைவர்களையும் போராட வென இயக்கங்களில் இணைந்து கொண்ட இளைஞர்களையும், யுவதிகளையும் கொன்றொழித்துவிட்டு இன்று புலிகள் தமது ஆயுத மேலாண்மையை நிறுவியுள்ளார்கள்.

அதனை தொடர்ந்து தக்க வைப்பதற்கு நாளும் பொழுதும் கொலை புரிகிறார்கள். கிழக்கில் இந்தக் கொலைகள் நாளும் பொழுதும் எல்லை கடந்து நிகழ்கின்றன.

கோயில் திருவிழாக்கள், சுனாமி அகதி முகாம், பாடசாலை என்று எந்த வரையறையுமற்று சிறுவர். சிறுமியர் புலிகளின் படைத் தேவைகளுக்காக பிடித்துச் செல்லப்படுகிறார்கள்.

இந்த அநியாயங்கள் பற்றி கேள்வியெழுப்புவர்கள் உயிருடன் இருக்க முடியாது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் எங்கும் முறையிட முடியாது. ஆனால் மீறல்கள் அவ்வப்போது நிகழத்தான் செய்கின்றன. சில இடங்களில் மக்கள் முறையிடுகிறார்கள். துணிச்சலாக தமக்கு நேர்ந்ததைப் பற்றி முறையிட்டுள்ளார்கள்.

வடக்கு கிழக்கில் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும். என மனித உரிமை அமைப்புக்களும் சர்வதச சமூகமும் திரும்பத் திரும்ப வலியுறுத்தியும் புலிகள் அதனை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை. சிறுவர் சிறுமியரை புலிகள் யுத்தத்திற்கு அணிதிரட்டுவது தொடர்பாக சிறுவர் அமைப்புக்களும், ஐ.நா சிறுவர் பாதுகாப்பு நிதியமும் மனித உரிமை அமைப்புக்களும் திரும்பத் திரும்ப வலியுறுத்தியும் சிறுவர்களை அணிதிரட்டுவது அதிகரித்துத்தான் இருக்கிறது.

வடக்கு கிழக்கில் சமூக பொருளாதார அபிவிருத்தி என்று சொல்வதற்கு குறிப்பிடும்படியான ஒன்றும் இல்லை. கிழக்கில் படுகொலை ஆள்பிடி தாண்டவம் விரித்தாடுகிறது. இத்தகையயொரு சூழ்நிலையில் சமூக பொருளாதார அபிவிருத்தி நிகழும் என எதிர்பார்க்க முடியாது.

அர்த்தமுள்ள சமாதானம், படுகொலைகளற்ற மக்கள் மத்தியில் நம்பிக்கைகளை கட்டியெழுப்புவதாகவும் புதிய தளைமுறையினர் நம்பிக்கையுடன் வளர்வதற்கான சூழ்நிலையும் வேண்டும்.

ஆனால் இங்கு முளையிலேயே நம்பிக்கைகள் சிதறியடிக்கப்படும் நிலையே காணப்படுகிறது.

ஒரு வன்முறையற்ற பூமியை நோக்கி எமது மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஏக்கம் இந்த அபிலாஷை என்பதே உண்மையானது. சாதாரண மக்கள் நாகரீகமாகவே வாழ விரும்புவார்கள். அதுவும் மனிதர்களாக. காட்டுமிராண்டிகளாக அல்ல.

# ஜனாதிபதித் தேர்தலில்..........

01ம் பக்கத் தொடர்ச்சி

வல்லமையை புலிகள் உலகுக்கு மீண்டும் காட்டியுள்ளதோடு இலங்கையில் இனப்பிரச்சினைக்கு இணக்கப்பாடான அரசியல் தீர்வொன்று ஏற்படுவதற்கான நிலைமையையும் கடுமையாக்கியுள்ளனர்.

இந்த படுகொலை கடுமையாக்குவது, சமாதான தீர்வுக்கான நிலைமைகளை சிக்கலாக்குவது என்ற உட்கிடக்கையையும் கொண்டிருந்தது என்பதனை தெளிவுப்படுத்துகிறது.

இலங்கையில் 2002 ம் ஆண்டு பெப்ரவரி 22 இல் புலிகள் - ஐ.தே.க சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான பிறகு பெரும் எடுப்பிலான யுத்தம் நிகழவில்லையே தவிர வடக்கு- கிழக்கின் ஜனநாயக சக்திகளை வேரறுக்கும் புலிகளின் பாசிசம் பாரிய அளவில் பரந்தளவில் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. புலிகளின் உள்ளே ஏற்பட்ட முரண்பாடுகூட கிழக்கில் மிகவும் குரூரமான முறையில் கையாளாப்பட்டது. முஸ்லீம் மக்கள் வாழும் பகுதிகளில் அமைதியின்மையும், மரணங்களும், ஆட்கடத்தலும் நிகழ்த்தப்பட்டன.

சுனாமி பேரனர்த்தம் கரையோர சமூகத்தின் வாழ்வை, நாகரீகத்தை துடைத்தழித்த போது அந்த மாபெரும் மானிட இடர் நெருக்கடியின் மத்தியிலும் சிறுவர்,சிறுமியரை தங்கள் படைத் தேவைகளுக்காக, யுத்த நோக்கங்களுக்காக அணிதிரட்டிச் செல்லும் போக்குக் காணப்பட்டது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு விரோதமாக படை, பொலிஸ், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவோ, நோர்வே சர்வதேச அனுசரணையாளர்களோ துரதிஷ்டவசமாக இவற்றை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை. புலிகள் - அரசு என்ற இரண்டு அதிகார சக்திகளுக்கிடையே நிகழும் பேச்சுவார்த்தை முறியக்கூடாது என்று பார்த்தார்களே தவிர ஜனநாயகம், மனித உரிமை, என்பன பெரும் போக்காக புறக்கணிககப்பட்டன, உதாசீனம் செய்யப்பட்டன.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா பொறுத்தவரை அது இந்த சமாதான காலகட்டத்தில் தோழர் தம்பிராஜா சுபத்திரன் (றொபட்), பூபாலபிள்ளை அழகுதுரை உட்பட பெறுமதி வாய்ந்த தலைவர்களையும், தோழர்களையும் ஆதரவாளர்களையும், இழந்துள்ளது. மாற்றுக் கருத்துள்ள சகல சக்திகளுக்கும் இத்தகைய பயங்கர அனுபவம் நேர்ந்துள்ளது.

இதனை புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்திய, ஆரம்பித்த ரணில் அரசும், உதாசீனம் செய்தது.

சர்வதேச, உள்ளுர் மனித உரிமை அமைப்புக்கள், இலங்கையின் வடக்கு தெற்கு ஜனநாயக சக்திகள் இதற்காக குரல் கொடுத்த போதும் அவை புறக்கணிக்கப்பட்டன. தற்கொலை குண்டுத்தாக்குதல் முயற்சிகள் கூட விதிவிலக்கான சம்பவங்கள். பிரதான விடயத்தை பாதிக்காது என்று கூறப்பட்டது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கூட பாலசிங்கத்தின் அவதந்திர திரைமறைவு ஆலோசனையின் பேரில் மாற்றுத் தமிழ் கட்சிகள் எல்லாம் துணைப்படைகள் என வரையறுக்கப்பட்டன.

இத்தகைய ஒரு நிலைமையை நாகரீகமான, மானிடன், உலக பிரஜை ஏற்றுக் கொள்ள முடியாது. மனித உரிமையும், ஜனநாயகமும் இனப்பிரச்சினையுடன் சம்பந்தப்படாத விடயங்கள் என கூறுவது தன்னை மறைக்க மண்ணுள் தலையை புதைக்கும் தீக்கோழியின் நிலையாகும்.

நாங்கள் கூறுகிறோம் இனப்பிரச்சினைக்கு தீர்வென்பது சம்பந்தப்பட்ட மக்களுக்கே. தவிர ஒரு குழுவிடம் தன்னை சமூகத்தின் ஏகபிரதிநிதி எனக்கூறும் குழுவிடம் ஒப்படைப்பது அல்ல. இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தப்பட்ட மக்களுக்குரியதே.

எனவே சம்பந்தப்பட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தரப்பினரும், சிவில் சமூகம் உட்பட இதில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். மனித உரிமை, ஜனநாயகத்திற்கும் இனப்பிரச்சினை தீர்வு என்று கூறப்படுவதற்கும் இடையே பெரும் தடை மதில் சுவரை நாம் எழுப்பிவிட முடியாது.

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக நிகழ்ந்து வரும் இன முரண்பாட்டுச் சிக்கல் அதன் பரிணாமத்தில் கடந்த தசாப்தத்தின் நடுப்பகுதி தொடக்கம் இந்த தசாப்தத்தின் முற்பகுதி வரை சமஷ்டி என்ற கருத்து நிலையை நோக்கி பல்வேறு முரண்பாடுகளினூடாக வளர்ச்சிப் பெற்றுள்ளது. இது இனி பின்நோக்கிச் செல்ல முடியாது. வரலாற்றுச் சக்கரங்களை பின்நோக்கி திருப்ப முடியாது. அப்படி ஏற்படினும் அது தற்காலிக நிலையே.

இலங்கையை பொறுத்தவரை பாரிய நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. நகர, சமூக அடுக்கிலும் பாரிய இடைவெளிகள் காணப்படுகின்றன. தேர்தலுக்கு தேர்தல் பாணின் விலையை குறைப்போம், அல்லது கனவுலக வாழ்க்கையை ஏற்படுத்துவோம் என்று வாக்குறுதி அளிக்கும் போலித்தனங்களை விடுத்து இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் சிறந்தொரு வதிவிடம், சுகாதார வசதி, சிறந்த கல்விவசதி, சிறந்த போக்குவரத்து வசதி, மின்சாரம், குடிநீர், தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அடிப்படையான திட்டங்கள் வேண்டும். அதற்கான அர்ப்பணம் வேண்டும்.

காலனியாதிக்கக் காலத்தில் காலனியாதிக்கவாதிகளால் அவர்களின் தேவைக்காக உருவாக்கப்பட்ட அதிகார கட்டமைப்பு தீவிர மறுசீரமைப்புக்கு உட்படுத்த வேண்டும். அவை உள்ளுர் மக்களுக்கு இசைவுப்படையாக, நட்புறவு உள்ளவையாக மாற்றப்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சியும் அடிப்படை மனித, ஜனநாயக உரிமைகளும பேணப்பட வேண்டும்.

இலங்கையின் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பு தீவிர மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் 1990 களின் நடுப்பகுதியில் பதவியேற்றப் பின்னர் இத்தகைய முயற்சி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அந்த முயற்சி முன் கொண்டு செல்லப்பட வேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் அதற்கான தகுதியும் திராணியும் கொண்டவர் என்றே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபா கருதுகிறது. அவருடைய தொலைநோக்கு தெற்கு கிராமிய பின்புலம், 1980 களின் இறுதிப்பகுதியில் நிலவிய இருண்ட காலத்தில் பயத்தில இருந்து விடுபடுவதற்காகவும், ஜனநாயக, மனித உரிமைகளுக்கான இயக்கத்தை உறுதியுடன் முன்னெடுத்துச் சென்றவர்.

சர்வதேச அளவில் பலஸ்தீனர்களுடைய பிரச்சினையை நட்புறவுடன் அணுகியவர். அவர்களின் விடுதலையை நேசித்தவர். இந்த நாட்டின் தூர தெற்கின் கிராமிய பின்புலத்தை கொண்ட அவர் இந்த நாட்டின் சாமான்ய மக்களின் பிரச்சினைகளையும், இனங்களின் பிரச்சினைகளையும் சினேகபூர்வமான முறையில் அணுகக்கூடியவர் என்றே நாம் கருதுகிறோம்.

இந்திய முறையை ஒத்ததான அரசியல் தீர்வொன்றைப் பற்றி அவர் சர்வதேச ஊடகங்கள் சிலவற்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார். ஆசியாவின் மிகப்பெரும் ஜனநாயகம் இந்தியா. இந்தியாவின் முறைமைகள் எமக்கு சாலவும் பொருந்தும் என நாம் திடமாக நம்புகிறோம்.

இந்தியாவின் அரசியல் யாப்பு அதிகாரங்களை பகிர்வதற்கான நெகிழ்வுத்தன்மையை கொண்டதாகவும், நிர்வாக முறைமைகளில் இந்திய நிலைமைகளுக்கு ஒத்ததாக பஞ்சாயத்துராஜ் என்ற அமைப்பும் அங்கு உருவாக்கபபட்டுள்ளது. இவை எமக்கு ஆர்வமூட்டுவனவாகவும் எமது சூழலுக்கு பொருந்தக் கூடியதுமாகும். மூன்றாம் உலக நாடுகளில் உள்ள அதிகார பகிர்ந்தளிப்பு முறைகளில் இந்திய முறையை விட சிறந்த முறையை அவதானிக்க முடியாது.

இலங்கையில் பாரிய சமூக பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். குறுகிய எல்லைக் கோடுகளை போட்டுக்கொண்டு கூட்டுப் புழுக்களாக இனி மேலும் நாங்கள் வாழ முடியாது. எமது மூடிகளை உடைத்துக் கொண்டு வண்ணாத்திப் பூச்சிகளாக நாங்கள் பறப்பதற்கு தயாராகுவோம்.

இதுவே எமது கட்சியின் நிலைப்பாடும் ஆகும்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா தனது பாரம்பரியத்தில் வலதுசாரி அரசியல், பழைமைவாத அரசியலை நடத்தியதில்லை. இது அல்லது அது என்ற அரசியல் வியாபாரம் நடத்தியதில்லை. தெற்கின் முற்போக்கு சக்திகள், மனித உரிமை ஜனநாயகவாதிகள் இவற்றுடன் இணைந்தே செயற்பட்டு வந்திருக்கிறது.


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 22 25179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 22 27118

141A , மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 22 23102

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 22 32822


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கதிர்காமரின் படுகொலையின் பின்னர். இலங்கையின் அரசியல் சூழ்நிலை

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களின் படுகொலை தொடர்பாக எழுந்த அதிர்ச்சி அலைகள், கண்டனங்கள், வாதப்பிரதிவாதங்கள் மெல்ல மெல்ல தணிந்து வருகின்றன. ஆனால் புலிகள் தமது படுகொலை நடவடிக்கைகளை தொடர்ந்து வடக்கு கிழக்கில் அரங்கேற்றி வருகிறார்கள். தெற்கிலும் திரைமறைவில் வன்முறைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கிழக்கில் திருமலை மூதூரில் இராணுவ சோதனைச்சாவடியின் மீது சினைப்பர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மட்டக்களப்பு நகரில் ஆங்காங்கே சோதனைச்சாவடிகள் மீது நள்ளிரவு கிரனைட் குண்டுத்தாக்குதல்கள நிகழ்ந்தன. அம்பாறை மாவட்டம் அக்கரைபற்றில் சுனாமி அகதி முகாம் ஒன்றின் மீது தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. காவலுக்கு நின்ற பொலிசாரும் அதிரடிப்படையினரும் காயமடைந்தார்கள்.

சிறுவர்களை படையணிகளுக்கு சேர்க்கும் நடவடிக்கைகளும், முதியோருக்கு கட்டாய பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளுக்கும் குறைவு இருக்கவில்லை. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கரடியனாற்றிலும், அரசடித் தீவிலும் கருணா அணியினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கருணா அணியினரால் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் கைக்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானது. வவுனியாவில், ஈ.பி.டி.பி, புளொட் உறுப்பினர்கள் புலிகளின் பிஸ்டல் குழுவினரின் தாக்குதலுக்கு இலக்கானார்கள். மலையகத்தில் நோர்வூட்டில் புலிகளின் ஆயுதங்கள், ரவைகள் கணடுபிடிக்கப்பட்டுள்ளன. சம்மாந்துறை பாண்டிருப்பு பகுதிகளில் பொலிசார் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது.

ஆனால் கதிர்காமரின் படுகொலையை மறுத்துக் கொண்டும், மறுபுறத்தில் அப்படுகொலையை ஆதரித்து புலிகளின் ஊடகங்கள் எழுதிக்கொண்டும் பேசிக்கொண்டும் இருக்கின்றன. தனியொரு மனிதனின் மரணத்தை ஒரு இனமே கொண்டாடுகிறது என புலிகளின் குரல் வானொலியில் தவபாலன் என்பவர் பேசியுள்ளார்.

கதிர்காமரின் படுகொலைக்குப் பின்னான இந்த 12, 13 நாட்களிலும் வகை தொகையின்றி படுகொலைகளும், குண்டு வீச்சு சம்பவங்களும் சிறுவர் சிறுமியரை யுத்தத்திற்கு அணிதிரட்டுவதும் போன்ற சம்பவங்கள நிகழ்ந்துள்ளன. இலங்கை மனித உரிமை ஆணைக்குழு புலிகளின் யுத்தத்திற்கான சிறார்களின் அணிதிரட்டல் பற்றியும், அது முன்னெப்போதையும் விட அதிகரித்திருப்பதையும் புள்ளி விபரங்களுடன் சுட்டிக்காட்டி அறிக்கை வெளியிட்டிருந்தது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் இதனை குறிப்பிட்டு அறிக்கை வெளியிட்டு இருந்தது.

புலிகள் தொடர்ந்து கதிர்காமரின் படுகொலையை ஒப்புக்கு மறுத்துக் கொண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது சம்பந்தமாக ஆராய்வதற்கு தயார் எனத் தெரிவித்துக்கொண்டு வகை தொகையற்ற அராஜகம் படுகொலைகளை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

சர்வதேச மற்றும் உள்ளூர் மனித உரிமை அமைப்புக்கள் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பாளர்களின் நேரடி பிரசன்னம் மனித உரிமை மீறல்கள் நிகழும் இடங்களில் இருக்க வேண்டும், மறுசீரமைப்பில் இதனை உள்ளடக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன.

படுகொலைகள் புரிபவர்களும் யுத்தத்திற்கு சிறுவர் சிறுமிரை அணிதிரட்டுபவர்களுக்கும் எதிரான சர்வதேச போக்குவரத்துத் தடை,பொருளாதாரத் தடை என்பன உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட வேண்டும்

இதற்கிடையே லண்டனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தடை செய்யப்பட்டது. ஐரோப்பிய யூனியனிலும் புலிகள் மீது தடைகள் உருவாகக்கூடிய சாத்தியப்பாடுகள பற்றி பேசப்படுகிறது.

கதிர்காமரின் மரணத்தின் பின்னர் இலங்கையின் ஜனாதிபதி சர்வதேச சமூகத்திடம் விடுத்த வேண்டுகோள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கதிர்காமரின மரணச்சடங்கில் ஆற்றிய உரை வெளிவிவகார அமைச்சரின் செயலாளர் பள்ளியக்காரசமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால, இலங்கையின் அமெரிக்காவுக்கான தூதுவர் பேர்னாட் திலகரட்ண ஆகியோர் சர்வதேச சமூகம் படுகொலைகளுக்கும் வன்முறைகளுக்கும் எதிராக அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தன.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் உரையில் செப்டம்பர் 11, அமெரிக்காவிலும், ஜூலை 7 இங்கிலாந்திலும் நிகழ்ந்த சம்பவங்களை சுட்டிக்காட்டியிருந்தனர்.

சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளின் கடப்பாட்டையும் இந்த நாடுகளுக்குள்ள பொறுப்பையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா நோர்வேயின பிரதமருக்கு கடிதம் எழுதி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்வதற்கான பேச்சுவார்த்தை யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் நோர்வே அனுசரணையாளர்கள் முன்னிலையில் உடனே நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார்.

கதிர்காமரின் மரணத்துக்கு முன்னர் பாலசிங்கம் விடுத்த வன்முறையான அச்சுறுத்தல் நிறைந்த அறிக்கையும் கதிர்காமரின் படுகொலையில் பாலசிங்கத்திற்கு தெரிநதிருக்கக்கூடிய விடயங்கள் பற்றிய கேள்வியை எழுப்பியிருந்தன. கதிர்காமரின் படுகொலையை சர்வதேச சமூகத்தில் அநேகமான நாடுகள், ஐ.நா நிறுவனங்கள் பயங்கரவாதச் செயல் என்றே குறிப்பிட்டிருந்தன.

இந்நிலையில் புலிகள் நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக அல்லது கதிர்காமரின் படுகொலை மூலம் எழுந்த சூழ்நிலையை திசை திருப்புவதற்காக அல்லது ஐதாக்குவதற்காக - உடனடியாகவே யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்வதற்காக அல்ல, ஏற்கனவே இருக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக் கொண்டது.

அடுத்து வரும் இரண்டு வாரங்களில் பேச்சு வார்த்தை நிகழும் சாத்தியம் பற்றி தெரிவிக்கப்பட்டது. அந்த வாரங்களும் முடிவடையும் தறுவாயில் உள்ளன. உண்மையில் கதிர்காமரின் படுகொலையினால் எழுந்த சூழ்நிலையை தணிப்பதற்காகவும், அழுத்தங்களில் இருந்து தப்பிக் கொள்வதற்காகவுமே புலிகள் அவ்வாறு கூறினார்கள்.

ஆனால் அவர்கள் வழமையாக மேற்கொள்ளும் அட்டூழியங்கள், அராஜகங்கள் எல்லாவற்றையும் செய்து கொண்டு இருக்கிறார்கள். தற்போது நோர்வேயில் பேச்சுவார்த்தை இல்லை உள்நாட்டிலேயே நடக்கும் என தெரிவித்ததால் புலிகள் தரப்பில் அதிருப்திகள் வெளியாகின. வன்னியில் நடத்தப்படுவது பற்றியும் பேசப்படுகிறது.

இதற்கிடையே புலிகளின் முகவர் அமைப்பான த.தே.கூ இன் பா.உ ஜோசப் பரராஜசிங்கம் ஆணவத்துடனும், திமிர்த்தனத்துடனும், வடக்கு கிழக்கில் இருந்து துணைப்படைகள் வெளியேற்றப்பட வேண்டும் என்று தெரிவித்தார். புலி ஆதரவு ஊடகங்களில் இது மிகவும் பிரபலப்படுத்தப்பட்டது. அவர் இங்கு துணைப்படைகள் என்று கூறுவது மாற்று தமிழ் அமை

விளங்கும். ஜோசப் பரராஜசிங்கம் போன்றவர்களின் அறிக்கை படுகொலைகளை உற்சாகப்படுத்தி ஆதரிக்கும் தொனியிலேயே அமைகின்றன.

கிழக்கில் வன்னி மையவாத புலிகள் பற்றிய அவநம்பிக்கைகள் அதிகரித்து வருவதால் தனது அரசியல் எதிர்காலம் அஸ்தமித்து விடக்கூடும் என்ற பீதியும் மற்றவர்கள் பற்றிய அவதூறு பரப்புவதற்கு காரணமாக இருக்கிறது.

வடக்கு-கிழக்கில் ஜனநாயகம் இல்லை, மனித் உரிமைகள் உறுதிப்படுத்தப்படவில்லை, அதிகாரப் பகிர்வும் இல்லை, பல்வேறு சமூகங்களுக்கும் பாதுகாப்பில்லை, சிறுவர் சிறுமியரின் எதிர்காலம் படையணிகளுக்கு அணிதிரட்டப்படுவதால் பாதிக்கப்படுகிறது, என்பதைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாதொரு சூழ்நிலை காணப்படுகிறது. கிழக்கில் தொடர்ந்து நிகழும் கொலைகள் ஆட்கடத்தல்கள் மக்களை மனம் பேதலிக்க வைத்துள்ளது. இதிலிருந்து மக்கள் மீண்டெழ வேண்டும்.

ஆனால் ஜோசப் பரராஜசிங்கம் சமூக அவலம் பற்றிய எந்த அக்கறையும் இல்லாமல் அந்த அவலத்தை ஏற்படுத்தியதில் பெரும் பங்கு வகித்தவர்கள் மீது தமது விசுவாசத்தை காட்டுவதன் மூலம் ஒரு சமூக சூறையாடலை செய்து கொண்டு இருக்கிறார்.

இத்தகைய போர்வழிகள் தொடர்ச்சியாக அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

**பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பற்றி**

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இலங்கையின் பாரம்பரியமான ஒரு அரசியல் பின்புலத்தை கொண்டிருப்பினும் கிராமப்புற மக்களின் மீது ஈடுபாடு கொண்ட ஒருவர். இலங்கையின் பொருளாதார கட்டுமானங்கள் பெரும்பாலும் கொழும்பை மையமாகக் கொண்டே அமைகின்றன. இவர் கொழும்பு அரசியல் பின்புலங்களிலிருந்து வேறுபட்டவர். 1980களின் பிற்பகுதியில் நிலவிய இருண்ட காலத்தில் மனித உரிமை ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்தவர். பலஸ்தீனர்கள் மீது தொடர்ச்சியாக நட்புபாராட்டி வந்தவர்.

**ஜனாதிபதி சந்திரிகா**

ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் சில குறிப்பிடத்தகுந்த முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1. சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன் வைத்தது.

2. கிருஷாந்தி பலாலியல் பலாத்காரம், படுகொலை தொடர்பாக சம்பந்தப்பட்ட குற்றம் சாட்டப்பட்ட படையினரை நீதிமன்றத்தில் நிறுத்தியது.

3. புலிகளின் பாசிச பிடியிலிருந்து யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்தது.

4. முஸ்லீம் மக்களின் தலைவர் அஷ்ரப்புடன் இணைந்து தென்கிழக்கு சமூக பொருளாதாதர அபிவிருத்தியில ஒத்துழைத்தது.

5. மலையகத்தில் வீடமைப்பு திட்டங்களை உருவாக்குவதற்கும் அதற்காக தனியானதொரு அமைச்சை ஏற்படுத்தியதிலும், கிராம சேவகர்களை நியமிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

6. சமுர்த்தி திட்டத்தின் மூலம் கிராமபுற வறுமை கோட்டின்கீழ் வாழும் இளைஞர் யுவதிகளின் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்த முனைந்தது.

7. சமூக சாதகமான கல்வி சீர்திருத்தங்களை மேற்கொண்டது.

8. 1994 இற்கு முந்திய 17 வருட ஆட்சியில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் அச்சுறுத்தல்கள் தொடர்பான விசாரணை கமிஷன்களை அமைததது.



9. 1983 இனவன்முறை தொடர்பாக அரசு என்ற வகையில் பகிரங்கமாக மன்னிப்பு கோரியதும், விசாரணை கமிஷன்கள் அமைத்தது.

10. மனித உரிமை ஆணைக்குழுவை அமைத்தது.

11. முற்போக்கு சக்திகளுடன் இணைந்து கிராம நகர ஏற்றத்தாழ்வை குறைப்பதற்கு முயன்றது.

ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கு முனைந்தது. போன்றவற்றை குறிப்பிட முடியும்.

பாரிசில் கல்வி கற்கும் போதும் பின்னர் அவரது கணவர் விஜயகுமாரணதுங்காவுடன் இணைந்து ஜனநாயகத்துக்கான மாற்று அமைப்பான சிறீலங்கா மக்கள் கட்சியை ஏற்படுத்தியவர். அதில் அவரது கணவர் படுகொலை செய்யப்பட்டார்.

கொழும்பு நகரசபை மைதானத்தில் நிகழ்ந்த பயங்கரவாதத் தாக்குதல் ஒன்றில் தனது ஒரு கண்ணை இழநதார்.

## எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பிரதமர்..............

01ம் பக்கத் தொடர்ச்சி

1980 களின் பிற்பகுதியின் இருண்ட நாட்களில் "பயத்திலிருந்து விடுபட" என்ற இயக்கத்தை முன் கொண்டு செல்வதில் தனது பங்களிப்பைச் செய்தவர்.

### தேர்தல் விஞ்ஞாபனம்

தற்போது ஜனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வறுமையை ஒழித்தல், பாரபட்சங்களை களைதல், சமூக நீதியை நிலைநாட்டல் ஆகிய அம்சங்கள் இடம்பெறுகின்றன. குறிப்பாக இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் வடக்கு-கிழக்கில் ஜனநாயகத்தை, மனித உரிமையை உறுதிப்படுத்துவது பற்றியும், இலங்கையின் தமிழ் முஸ்லீம், பறங்கி இன மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான அரசியல் யாப்பு ரீதியான ஏற்பாடுகள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சமாதான வழிகளில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது பற்றி அழுத்தியுரைக்கப்பட்டுள்ளது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் இந்திய முறையிலான அதிகாரப்பகிர்வு தொடர்பாகவும் ஆர்வம் கொண்டுள்ளார்.

தவிர இலங்கையின் தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், சிறார்களின் நலன்கள், வேலையின்மை, வறுமையை அகற்றுதல் ஆகிய விடயங்களுக்கும் சட்டம் ஒழுங்கு மற்றும், நீதித்துறை மறுசீரமைப்பு ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. நிர்வாக நீதித்துறை பரலாக்கல் பற்றியும் பிரஸ்தாபிக்கபட்டுள்ளது.

### எமது நிலைப்பாடு

★ ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் முஸ்லீம் மக்களுக்கும் அதிகாரப் பகிர்வு, சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளை பாதுகாத்தல், வடக்கு- கிழக்கில் வாழக்கூடிய கருத்து சுதந்திரமும், பலகட்சிகள் செயற்படுவதற்கான ஜனநாயக உரிமைகளும், படுகொலைகளை தடுத்து நிறுத்துவதும், சிறுவர் சிறுமியரின் உரிமைகளைப் பாதுகாத்தலும் என்ற அவசர அவசியமான முக்கியமான விடயங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

★ முழு இலங்கையிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு நாகரிகமான மனிதர்களை மதிக்கும் சுயமரியாதை கௌரவத்தை உறுதி செய்யும் வாழ்க்கையொன்று கட்டி எழுப்பப்படவேண்டும்.

★ மனித முகம் கொண்ட சமூக பொருளாதார கட்டமைப்பு இலங்கையில் கட்டி எழுப்பப்படவேண்டும். நுகர்வு வாதத்தையும், பங்கு வியாபாரத்தையும் அடிப்படையாகக் கொண்ட சாதாரண மக்களுக்கு எந்த பாதுகாப்பும் வழங்காத அராஜகப் பொருளாதார முறை களையப்படவேண்டும்.

★ வரி என்ற பெயரில் தமிழ் மக்கள் மீது இரட்டை சுமை ஏற்றப்பட்டுள்ளது. எந்த சட்ட வரம்புக்கும் தார்மீக நெறிமுறைகளுக்கும் உட்படாத சூறையாடலுக்கு தமிழ் மக்கள் உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்த கிடுகிப்பிடியிலிருந்து தமிழ் மக்கள் விடுவிக்கப்படவேண்டும். வடக்கு- கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகளைப் போலவே இங்கு வாழும் முஸ்லீம், சிங்கள, மக்களின் உரிமைகள் நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

★ இலங்கையின் அனைத்து இன மத மக்களும் இலங்கையின் அனைத்து பகுதிகளுக்கும் அச்சமின்றிச் சென்று வரகூடிய, வாழக் கூடிய நிலைமைகள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

★ மதமாற்றத் தடைசட்டம் போன்றவை நிராகரிக்கப்படுவதோடு, மத சார்பற்ற இலங்கை கட்டியெழுப்ப துறை, சட்டம், ஒழுங்கு ஆகியன மத, இன தகைளிருந்து விடுவிக்கபட்டு சுதந்திரமாகச்செயற்படக்டியவையாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

★ தவிர சமகாலத்திற்கு தகவமைந்த, உலக மாற்றங்கள் யதார்த்தங்களை எதிர்கொள்ளகூடிய, யதார்த்த பூர்வமான இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும்.

★ இந்த உலகில் நாம் தனித்து கூட்டு புழுக்களாக வாழ்ந்திட முடியாது. நாம் வேகமாகவும் சமயோசிதமாகவும் இயங்கவேண்டும். தென்னாசிய அளவில் நாம் இணைந்து வாழவேண்டிய காலம் நெருங்குவதையும் நாம் உணரவேண்டும்.

★ ஐரோப்பாவிற்கு பொதுவான அரசியல்யாப்பு பற்றி சிந்திக்கபடும் காலத்தில் நாமும் தென்னாசிய அளவில் இணைந்து செயற்படுவதை பற்றி சிந்திக்க வேண்டும்.

★ எனவே எதிர்கால ஜனாதிபதி உள்ளூர், தெற்காசிய, உலக மாற்றங்களை யதார்த்தங்களை புரிந்து கொண்டவராக தீர்க்கதரிசனத்துடன் மக்கள நலன் சார்ந்து செயற்படுபவராக இருக்கவேண்டும்.

இந்தப் பல்வேறு அம்சங்களையும கருதிற்கெடுத்து பார்கும்போது மகிந்த ராஜபக்ஷ அவர்களே ஏற்புடையவர் என நாம் கருதுகிறோம். பெரும்பாலும் சமூக சாதகமான சக்திகளே அவருக்கு ஆதரவளிக்கின்றன என்பதும் இங்கு கருத்திற்கெடுக்கபட வேண்டியதாகும். இவ்வாறன விரிவான கண்ணோட்டம் அபிலாஷைகளுடனேயே ஈ.பி.ஆர்.எல்.எப்- பத்மநாபா எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் முஸ்லீம் மக்கள தமது ஆதரவை மகிந்த ராஜபக்ஷ விற்கு வழங்கவேண்டும் என எதிர்பார்க்கிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்-

www.tamilarangam.net



# யுத்த நிறுத்த மீறல்களை கட்டுப்படுத்த முடியாத கண்காணிப்புக்குழு

கடந்த 21.09.2005 அன்று இலங்கைக்கு உதவிவழங்கும் இணைத்தலைமை நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் ஜப்பான், நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகய நாடுகள் இலங்கையில் யுத்தநிறுத்தத்தின் மத்தியில் இடம்பெறும் படுகொலைகள், சிறுவர்களை படையணிகளுக்கு சேர்த்தல் போன்ற நடவடிக்கைகளை கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தன.

இந்த அறிக்கையில் புலிகள் அரசியல் படுகொலைகளையும், சிறுவர்களை பலவந்தமாகப் படைக்குச் சேர்ப்பதையும் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் வடக்கு கிழக்கில் உள்ள துணை இராணுவப் படைகளை நிராயுதபாணிகளாக்கி யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் அரசாங்கம் செயற்பட வேண்டும் எனவும் இரு தரப்பினருக்கும் காட்டமாக வலியுறுத்தியிருந்தனர்.

வடக்கு கிழக்குப்பகுதியில் இயங்கும் துணைப்படைகளின் செயற்பாடுகள், வன்முறைகளையும், பதற்ற நிலையையும் மென்மேலும் அதிகரிக்கும் என இணைத்தலைமை நாடுகளின் அறிக்கையில் பொதுப்படையாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. உண்மையில் வடக்கில் புலிகள் இயக்கத்தை சேர்ந்த எவரும் இதுவரை படுகொலை செய்யப்படவில்லை. துணைப்படைகளின் வன்முறைகள் மட்டுமல்ல துணைப்படை என்று எதுவும் வடக்கில் செயற்படவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

எனவே இணைத்தலைமை நாடுகளின் இந்த கூற்றானது வடக்கில் உள்ள மாற்று தமிழ் அரசியல் கட்சிகளை துணைக்குழுக்கள் என்று கூறி ஓரங்கட்ட முனையும் புலிகளின் கூற்றுக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்திருக்கிறது.

புலிகள் பாதுகாப்பில்லை என்று கூறி யாழ் மாவட்டத்திலும் தமது பணிகளை நிறுத்தி வன்னிக்குத் திரும்பிச் செல்வதாக பாசாங்கு செய்துகொண்டே யாழ் மாவட்டத்தில் மிரட்டல்கள், தாக்குதல்கள். படுகொலைகளை தொடர்ந்த வண்ணமேயுள்ளனர். அரசியல் வேலைகளுக்கென்று கூறி முறைப்படி எழுத்து மூலமான விபரங்களை படையினரிடம் சமர்ப்பித்து,

யாழ்குடாநாட்டுக்குள் வந்த புலிகள் திரும்பிச் சென்றுவிட முறைப்படி விபரங்களை சமர்ப்பிக்காமல் குடாநாட்டுக்குள் பிரவேசித்தவர்கள் தொடர்ந்தும் யாழ் மாவட்டத்தில் வன்செயல்களில் ஈடுபடுவதுடன் படுகொலைகளையும் புரிந்து வருகின்றனர்.

புலிகள் படுகொலைகளைப் புரிவது மாத்திரமல்ல பல்வேறு வழிகளில் யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டே 1.8 சரத்து சரியாக அமுல்படுத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

புலிகளின் இந்த குற்றச்சாட்டு உள்நோக்கமுடையதாக, கபடத்தனம் நிறைந்ததாகவே காணப்படுகிறது. புலிகளின் ஆலோசகர் பாலசிங்கமும், புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தமிழ்செல்வனும் இவர்களின் சீடர்களும் இந்த 1.8 சரத்து குறித்து தவறான வியாக்கியானங்களையே கொடுத்து வருகின்றனர்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை துஷ்பிரயோகம் செய்ய முனைகின்றனர் என்பதை அவர்கள் ஊடகங்களுக்கு தெரிவிக்கும் கருத்துக்களிலிருந்து எவரும் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும்.

கிளிநொச்சியில் நோர்வே பிரதித் தூதர் ஒடவர் லெக்கிரட், மற்றும் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொாக்லன்ட் ஆகியோரை 20.07.2005 அன்று சந்தித்துப்பேசிய பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் உதயன் பத்திரிகைக்கு அளித்த விசேட செவ்வியில் குறிப்பிட்டதாக அப்பத்திரிகை பின்வருமாறு பிரசுரித்திருந்தது.

இந்த ஆயுதக் குழுவினர் அனைவரும் கூணடோடு கைது செய்யப்பட வேண்டும் அவர்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அவர்கள் எம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால் தான் சுமுக நிலை ஏற்படும் என்பதை கூறியுள்ளோம்.

கிழக்கில் கருணா குழுவையும் சோத்து 5ஆயுதக் குழுக்கள் இயங்குகின்றன. தமிழ் நெற் இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வியில் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார். அன்ரன் பாலசிங்கம் குறிப்பிடும் 5ஆயுதக்குழுக்கள் எவை? துணைப்படைகள், ஆயுதக் குழுக்கள போன்றவற்றின் ஆயுதங்கள் களையப்பட்டு அககுழுக்கள் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும்.

லண்டனில் 23.07.2005 இல் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், கொழும்புக்கான நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோருடனான சந்திப்பின் போது அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார். துணைப்படைகள் என்ற ஒப்பந்த வாசகத்துடன் ஆயுதக் குழுக்கள் என்ற பதத்தையும் பாலசிங்கம் இணைத்துள்ளார், இவ்வாறு அவர்குறிப்பிடுவது யாரை? வவுனியாவில் உள்ள எமது அலுவலகங்கள் அங்கத்தவர்கள் தாககப்படுவதற்கு வவுனியாவில் ஆயுதங்களுடன் செயற்படும் மாற்று இயக்கங்களே காரணம். போர் நிறுத்த ஒபபந்தத்தினபடி தமிழ் குழுக்கள் எவையும் ஆயுதங்களுடன் நடமாட முடியாது.

எனவே இவ்வாறான ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட்ட பின்பே சுமூகமான ஓர் சூழலை உருவாக்க முடியும். அதற்கு இராணுவமும், பொலிஸாருமே நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கான நல்லதொரு நிலையை போர்நிறுதத‌க் கண்காணிப்புக குழு ஏற்படுத்தித் தரவேண்டும்.

இது புலிகளின் வவுனியா அலுவலகத்தில் 24.08.2005 அன்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹொாக்லண்ட் உடனான சந்திப்பில் புலிகளின் வவுனியா அரசியற்துறை பொறுப்பாளர் ஞானம் கூறியவை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எந்த ஒரு அரசியல் கட்சியும் தமது அரசியல நடவடிக்கைகளை சுயாதீனமாக முன்னெடுப்பதற்கு ஒரு போதும் தடையாக இருக்கப் போவதில்லையென புலிகள் உறுதிமொழி வழங்கியுள்ளதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்ட கிளைத் தலைவர் ஹெய்கே குலாகனன் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 11ம் திகதி மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையிலுள்ள புலிகளின மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே எழுத்து மூலமான இந்த உத்தரவாதத்தைப் புலிகள் வழங்கியதாகவும், இவற்றின் பிரதிகள் 233வது படைப்பிரிவு, பொலிஸ்,விசேட அதிரடிப்படை அத்தியட்சகர், ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்(வரதர்அணி) ஆகியவற்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கண்காணிப்புக் குழு மேலும் தெரிவித்துள்ளது. இது 24.01.2003 இல் வெளியான பத்திரிகைச் செய்தி. ஆரம்பத்தில தமிழ் அரசியல் கட்சிகளின் செயற்பாட்டுக்கு தடையாக இருக்கமாட்டோம் என கண்காணிப்புக்குழு ஊடாக தமிழ் அரசியல் கட்சிகளுக்கு உறுதிமொழி வழங்கிய புலிகள் இப்போது அவ்வாறு தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தையும் துணை இராணுவக் குழுக்கள் என்று முத்திரை குத்தி அப்புறப்படுத்தி விடமுனைந்துள்ளனர். யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குப் புறம்பாக, முன்னுக்குப்பின் முரணாக கூறிவரும் கருத்துக்கள் இதனை நன்கு புலபபடுத்துகிறது.

இருப்பினும் புலிகளுக்கு வக்காலத்து வாங்கும் சில ஊடகங்களும் புலிகளின தவறான வியாக்கியானங்களை பிரச்சாரப்படுத்தி வருகின்றனர். தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்கள் புலிகளால் படுகொலை செய்யப்படும் போது பராமிலிடரியை சேர்ந்தவர் கொல்லப்பட்டதாக தமிழ் நெற் இணையத்தளம் செய்தியை திரித்து வெளியிட்டு வருகிறது.

படுகொலைகளை நியாயப்படுத்த உள் நோக்கத்துடன் செய்யப்பட்ட திட்டமிட்ட பொய் பிரச்சாரம் இதுவாகும். தமது சுய இலாபங்களுக்காக புலிகளுக்குத் துதிபாடுகின்ற பத்திரிகைகளும், தமது இருப்பை காப்பாற்றிக்கொள்வதற்காக மட்டுமே எழுதுபவர்களும் நாளுக்கு நாள் நிலமையை மோசமடையச் செய்து வருகிறார்கள். புலிகளே நடுநிலை ஊடகங்கள் போன்று தங்கள் பினாமிகளை வைத்து நடாத்திவரும் பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பவையும் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

புலிகள் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குள் ஊடுருவி படுகொலைகளைப் புரியும் போது வீரதீரச்செயல் என்று மெச்சுபவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் படுகொலை செய்யப்பட்டால் இராணுவமே படுகொலைக்குப் பொறுப்பு என்று தர்க்க நியாயமின்றி எழுதுகிறார்கள். இவர்கள் அவலை நினைத்து உரலை இடிப்பது போன்று விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்ப்பதாகக் கூறிக்கொண்டு அதற்கு எதிரான செயல்களைச் செய்து வருகிறார்கள். வகைதொகையின்றி யுத்தநிறுத்த மீறல்களையும், படுகொலைகளையும் புரிந்து வரும் புலிகள் அதே வன்முறை தமக்கு எதிராக திரும்பும் போது தமது உறுப்பினர்கள் இத்தகைய எதிர் வன்முறைக்கு பலியாக நேரும்போது யுத்தநிறுத்த மீறல், தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் தக்க பாதுகாப்பு வழஙகவில்லை, ஜனநாயகம குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது என்று கூக்குரலிடுகிறார்கள்.

உண்மையில் 1.8 சரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது என்ன? 1.8 ஒப்பந்தமானது செயற்பாட்டுக்கு வரும் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் தமிழ்த்துணைப் படைகளின் ஆயுதங்கள் அரசாங்கத்தினால் களையப்படும். இந்த அணிகளின் ஆட்களை அரசாங்க ஆயுதப்

தொடர்ச்சி 06ம் பக்கம்

# தமிழர்களின் காட்டுமிராண்டி யுகம்

சில வாரங்களுக்கு முன்னர் மன்னார் சிலாவத்துறையில் வைத்து புலிகள் மூன்று பொலிசாரை கடத்திச் சென்றனர். அவர்கள் புலிகளின் நீதிமன்ற விசாரணைக்கு உட் படுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே வவுனியா ஆலங்குளத்தில் பொலிசார் மீது சில தினங்களுக்கு முன்னர் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருமலை, மட்டக்களப்பு என கிரனேட் வீச்சு, துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

புலிகளை பொறுத்தவரை யுத்த நிறுத்தம், சமாதான முயற்சிகள் என்பவற்றை தொடர்வதை விட சீர்குலைவு வேலைகளிலேயே நாட்டம் செலுத்துகிறார்கள்.

வாழ்க்கை என்பது அழகானது. ஆனால் மனித வாழ்வு நிம்மதியற்றதாக கெடுபிடி நிறைந்ததாக வன்முறையின் கோரத்தாண்டவம் நிலவுவதாக மாற்றுவதில் புலிகள் எப்போதும் அக்கறையாக இருக்கிறார்கள்.

மக்கள் பெரும் இழப்புக்களை சந்தித்தாலும் சரி, அதைப்பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை. சுனாமி அனர்த்தம் பேரழிவை ஏற்படுத்திய கிழக்கு மாகாணத்தில் அவர்கள் நாளும் பொழுதும் கொலை புரிவதை அதிகரித்திருக்கிறார்கள்.

மக்கள் நிம்மதியாக இருந்துவிட்டால் தங்களை மறந்து விடுவார்கள் என்று

இனப்பிரச்சினை, தீர்வு, சமாதானம் யுத்தநிறுத்தம் என்பவற்றை விட தமது அகங்கார அதிகாரத்தின் கீழ் எப்போதும் கீழ்ப்படிந்து பயபீதியுடன் வாழ வேண்டுமென்றே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இல்லாவிடில் தங்களை மறந்து விடுவார்கள் என்ற பீதி அவர்களை பிடித்து ஆட்டுகிறது.

மக்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதிலேயோ அல்லது இலங்கையின் பல்லினத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதிலேயோ அவர்களுக்கு சிறிதளவு அக்கறையும் கிடையாது.

மனித உரிமைகள், ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படுவதும் இனப்பிரச்சினை தீர்வின் ஒரு பகுதியே. நாங்கள் இங்கு இனப்பிரச்சினை தீர்வில் தமிழ் மக்கள் மீதான பேரினவாத பாரபட்சங்களில் இருந்து மாத்திரமல்ல தமிழ் மக்களுக்குள்ளேயே உருவாகியிருக்கும் அதிகார சக்தியிடமிருந்தும் சுதந்திரத்தைப் பெற வேண்டும்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் மாத்திரமல்ல முஸ்லீம்கள், சிங்களவர்களின் ஜனநாயக உரிமைகளும் தமிழ் மக்கள் மத்தியில் உருவான புலிகள் என்ற அதிகார சக்தியினால் மறுக்கப்பட்டிருக்கிறது.

உண்மையில் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் சர்வதேச சக்திகள் இந்த மீறல்கள் தொடர்பான உறுதியான அழுத்தத்தை புலிகளுக்கு கொடுக்கவில்லை என்றே கூற வேண்டும்.

அவர்கள் இந்த அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும் என்ற இலங்கையின் சமாதான

அண்மைக்காலமாக திரும்பத்திரும்ப வலியுறுத்தி வருகிறார்.

தவிர இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு யுனிசெவ் மற்றும் தனது அவதானிப்புக்களை ஆதாரமாக வைத்து புலிகள் சிறுவர்களை யுத்தத்திற்கு அணிதிரட்டுவது சமகாலத்தில் மோசமாக அதிகரித்திருப்பதையும் சுட்டிக்காட்டியிருந்தது.

கதிர்காமரின் படுகொலை இலங்கையின் அரசியல் தளத்திலும் இந்திய உப கண்ட அளவிலும் சர்வதேச அரங்கிலும், சிவில் சமூகத்தினர் மத்தியிலும் பாரிய அதிர்ச்சியலைகளை தோற்றுவித்தன. பயங்கரவாத குற்றச்செயலென கண்டிக்கப்பட்டது.

புலிகள தாம் அந்தப் படுகொலையை மேற்கொள்ளவில்லை என வழமை போல் அறிக்கை விட்டார்கள். கைப் புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை.

எனினும் இதனைச் செய்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலையை அடுத்து புலிகளின் சம்பந்தம் தொடர்பாக அக்குவேறு ஆணிவேராக புலிகளின் உப கண்ட அளவிலான சதி கண்டுபிடிக்கப்பட்டது. பிரபாவும் பொட்டம்மானும் இன்று இந்திய நீதிமன்றத்தால் குற்றம் சுமத்தப்பட்டவர்கள்.

கதிர்காமரின் படுகொலைக்கு முன்னர் 2003 ஜூன் 14 இல் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தலைவர்களில் ஒருவரான றொபேட் சுபத்திரன் அவர்கள் புலி கொலையாளிகளால் ஒரு விடுமுறை நாளில் பெண்கள் பாடசாலை வகுப்பறையில் இருந்து சினைப்பர் தாக்குதல் நடத்தி படுகொலை செய்தது யாரும் தெரிந்ததே.

இந்த கொலைகளை சிலாகிக்கவும், போற்றி வழிபடவும் கொலைகாரர்களை

சமூகத்தில் கணிசமானோர் கூட்டம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. கதிர்காமர் படுகொலை செய்யப்பட்ட போது இந்த காட்டு மிராண்டிகள் கொண்டாட்டம் நடத்தினார்கள். வன்னியில் மாத்திரமல்ல மெல்பேர்னிலும் நடத்தினார்கள்.

ஆதி சமூகங்கள் சிலவற்றில் நரமாமிசம் புசிப்பது இருந்திருக்கிறது. மார்க்சிய மூலவர்களில் ஒருவரான ஏங்கல்ஸ் குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற தனது நூலில் நர மாமிசம் புசிப்பது காட்டுமிராண்டி யுகத்தில் நிலவியது எனவும், ஆனால் இயற்கையில் பாதியளவு சார்ந்திருந்த ஆதி சமூகத்தில் சேர்ந்து உழைத்தல், பகிர்ந்து உண்ணல் என்பது அத்தியாவசியமாக இருந்தபடியால் சக மனிதனை அடித்துச் சாப்பிடும் நிலைமை சாத்தியமற்றுப் போனது.

ஆனால் நவீன வரலாற்றில் சில தென்னமெரிக்க, அவுஸ்திரேலியா ஆதிவாசி குழுக்கள் மத்தியில் இறந்தவர்களின் உடல்களை புசிக்கும் சில குழுக்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

1930 களின் முற்பகுதியில் ஹிட்லரால் உருவாக்கப்பட்ட இனவெறிக்கொள்கை யூத மக்களுக்கு எதிரானதும், தொழிலாளர்கள் ஜனநாயக முற்போக்கு சக்திகளுக்கு எதிரானதாக அமைந்திருந்தது. மனிதர்களை கொன்றுதள்ளும் வதை முகாம்கள் உருவாக்கப்பட்டன. நடமாடும் சடலங்களாக மனிதர்களை வாழவைப்பதில் ஒரு குரூர மகிழ்ச்சி இருந்தது.

கேவலம் தென்னாசியாவில் மெத்த படித்தவர்கள் என இறுமாந்திருக்கும் சமூகம் இங்கு படுகொலைகளை பூசித்துக் கொண்டு ஒரு தேசத்தை மயான பூமியாக்குவதில் புளகாகித மடைந்து கொணடு இருக்கிறது.

நன்றி - தமிழ்க்கதிர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தோழர் உமாகாந்தன் ஓராண்டு நினைவு நாள்
## செப்டெம்பர் ௨௮

தோழர் உமாகாந்தன் இலங்கையில் தேசிய ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை, சமூக பொருளாதார மாற்றங்களுக்காக ஒரு கால்நூற்றாண்டு காலம் புலம்பெயர்ந்த தளத்தில் தன்னை அர்ப்பணித்தவர்.

சர்வதேச அனுபவங்களின் வெளிச்சத்தில் இலங்கை இன முரண்பாட்டுச்சிக்கலை நோக்கியவர். இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பா, வடஅமெரிக்காவென பரந்து சென்றவர்கள் மத்தியில் இருந்த முற்போக்காளர்களுடன் உறவுகளை பேணியவர்.

தமிழ், தமிழ் என்ற பாமர வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவரல்ல அவர். தேசிய ஒடுக்குமுறையிலிருந்து தமிழ்ச் சமூகத்தின் விடுதலை என்பதில் மாத்திரமல்ல, முஸ்லீம் மக்களின் பிரச்சினைகள், மலையக தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள், இலங்கையின் ஒட்டுமொத்த சமூகமும் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பெண்கள், சிறார்களின் உரிமைகள், மனித உரிமைகள், ஜனநாயகம் என்பவற்றில் அவர் அக்கறை கொண்டிருந்தார்.

கடந்த நூற்றாண்டின் 1940 மத்தி, அல்லது பின்பகுதியில் விடுதலையடைந்த நாடுகளில் உருவாகிய முரண்பாடுகள், மோதல்கள், சிக்கல்கள் தொடர்பாக அதிகூடிய ஆர்வத்தை அவர் செலுத்தியவர்.

உலகின் பல்வேறு சுதந்திர இயக்கங்கள் தொடர்பிலும் அவர் ஈடுபாடு செலுத்தி பல கட்டுரைகளை பல்வேறு சஞ்சிகைகளில் எழுதியவர்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் தன்னை இணைத்துக் கொண்ட தோழர் உமாகாந்தன் தான் வரிந்து கொண்ட கொள்கைகளுக்காக தனது எழுத்தின் ஊடாகவும், செயற்பாட்டின் ஊடாகவும் உன்னத பங்களிப்பை வழங்கியிருந்தார். மாற்றுக் கருத்துக் கொண்டோர் யாவருடனும் நட்புடன் பழகியவர்.

1980 களில் லத்தீன் அமெரிக்காவில் ஏற்பட்ட சமூக, அரசியல் எழுச்சிகளிலும் அவர் ஈடுபாடு செலுத்தினார். சான்டினிஸ்டா நிக்கரகுவாவில் புரட்சிகர எழுச்சியை நடத்தியதன் பின்னர் அங்கு சென்றும் பணியாற்றியவர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் புலம் பெயர்ந்த தளத்திலான பெருமளவு பிரசுரங்கள் அவராலேயே எழுதப்பட்டன.

சென்னையில் தோழர் பத்மநாபாவின் திருமண வைபவத்தில் அவர் தோழர் பத்மநாபாவிற்கு தான் கையெழுத்திட்டு ஒரு பரிசுப் பொருளை வழங்கினார். இரண்டாவது பிரான்சுப்புரட்சி பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பயன்மிக்க நூலது.

சகோதர படுகொலைகள் தான் சார்ந்த சமூகத்தில் தலையெடுத்த போது அவர் பெரிதும் மனம் வெதும்பினார். அவரது தீவிர சமூக ஈடுபாடு அவருடைய சொந்த வாழ்க்கையையே சிதைத்தழித்தது.



புலம் பெயர்ந்த தளத்தில் தனக்கு வளமான வாழ்க்கையை தேடிக் கொண்டவரல்ல அவர். அவருக்கு மனைவியும், குழந்தையும் இருக்கிறார்கள்.

அவர் ஒரு மனிதன், ஒரு ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மனிதன், சுதந்திர வேட்கை கொண்ட மனிதன், எப்படி வாழ வேண்டுமென்று வாழ்ந்து காட்டியவர். டால்ஸ்டாயை போல், பாரதியை போல் வாழ்ந்து மறைந்தவர் அவர்.

அன்னார் மறைந்து ஓராண்டாக காலம் உருண்டோடி விட்டது. தோழர் உமாகாந்தனின் வாழ்வின் அமரத்துவமான அம்சங்கள் வாழும் எம்மால் முன் கொண்டு செல்லப்படும்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - பத்மநாபா

# சுடரொளி மீதான
## கிரனேட் தாக்குதலும் - படுகொலையும்

சில வாரங்களுக்கு முன்னர் வெள்ளவத்தை பெரோரா மாவத்தையில் அமைந்திருந்த சுடரொளி அலுவலகத்தின் மீது கிரனேட் வீசப்பட்டது. ஆனால் அது வெடித்து விபரீதங்களை ஏற்படுத்தவில்லை.

இதற்கிடையே ஜே.வி.பி யினர் நடாத்திய பேரணியொன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் போட்டோ பிடித்துக் கொண்டிருந்த நபர் ஒருவரை ஊர்வலத்தில் வந்தவர்கள் பிடித்து சோதனையிட்ட பின்பு பொலிசாரிடம் ஒப்படைத்தனர். அவர் பின்னர் நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இதற்கிடையே கொழும்பு கிரேன்ட்பாஸ் சுடரொளி அலுவலகத்தின் மீது கிரனேட் வீசப்பட்டது. இதில் வயோதிப காவலாளி ஒருவர் பலியானார். இன்னும் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் வீதியால் சென்ற இரு செய்தி சேகரிப்பாளர்கள் வீதியில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளனர்.

சுடரொளி ஒரு புலி ஆதரவு பத்திரிகை என்பதில பகுத்தறிவுள்ள யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. புலிகளின் படுகொலைகளை கூட அது நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆதரித்து எழுதும்.

இது வர்த்தக நோக்கிலான ஒரு ஆதரவு நிலையே. இவர்களின் வர்த்தக நோக்கிற்கு புலிகளின் பாசிசம் நன்கு பயன்படுகிறது.

சுடரொளியின் எழுத்து எப்படியானதாக இருந்தாலும் சுடரொளி மீதான கிரனேட் வீச்சை நாகரீகமான மனிதர்கள் கண்டிக்காமல் இருக்க முடியாது. ஏனெனில் இந்தச் செயல் காட்டுமிராண்டித்தனமானதும், ஜனநாயக விரோதமானதுமாகும்.

இந்தத் தாக்குதல்களை யார் செய்திருப்பார்கள் என்ற கேள்வி எழவே செய்கிறது.

இதேபோனற தாக்குதல் அண்மைக்காலத்தில் மட்டக்களப்பு தினக்கதிர் அலுவலகத்தின் மீதும், யாழ் நகரில் வீரசிங்கம் மண்டப கட்டிடத் தொகுதியில் அமைந்திருந்த சக்தி தொலைக்காட்சி அலுவலகத்தின் ஒளிபரப்பு கருவி சேதமாக்கப்பட்டதையும் இங்கு குறிப்பிட முடியும்.

ஊடகங்களில் வரும் செய்திகள் தொடர்பாக மாத்திரமல்ல மா·பியா பாணியிலான கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகளும், விசுவாசம், தகவல் அளிப்பு தொடர்பான பிரச்சினைகளும் இத்தகைய சம்பவங்களுக்கு காரணமாய் அமைகின்றன. சாரம்சத்தில் ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் தமது அதிகாரத்தை நிலைநிறுத்த முயல்கிறார்கள்.

உதாரணமாக சில தினங்களுக்கு முன்னர் இணையத்தளமொன்று யாழ்பாண ஊடகவியலாளர்கள் அமெரிக்க தூதரகத்தின் தகவல் அதிகாரி ஒருவருடன் மதிய விருந்தில் கலந்து கொண்டதை பியர் பார்ட்டி (Beer Party) என வருணித்து அந்த விருந்து வைபவத்தில் கலந்து கொண்ட யாழ் ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தும் விதமாக படத்துடன் செய்தி வெளியிட்டிருந்தது.

இதற்கு முன்னர் இலங்கையின் இன்னுமொரு ஊடகவியலாளரின் படத்தை பிரசுரித்து செய்தி வெளியிட்டிருந்தது. இந்தச் செய்திகளை வெளியிட்ட ஊடகம் நேரடியாகவே புலிகளை பிரதிநிதித்துவம் செய்து மற்றவர்களை அச்சுறுத்தி, மிரட்டி பகிரங்கமாகவே கொலை பயமுறுத்தல் செய்யும் ஊடகமாகும். மாற்று அரசியல் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அவர்களைப் பற்றி ஊடக வரைமுறைகள் தர்ம நியாயங்களுக்கு அப்பால் அவதூறு செய்வது இதன் வழமையான போக்காகும்.

அண்மையில் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கொலை செய்யப்பட்டபோது அந்தக் கொலையை உற்சாகத்துடன் நியாயப்படுத்தியும், மகிழ்ச்சி கொண்டாடியும் எழுதியது அந்த இணையம். தற்போது அந்த இணையத்தில் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி செய்திகள் வெளிவருகின்றன என்றால் அது ஊன்றி கவனிக்கப்பட வேண்டும்.

தவிர அண்மைக்காலமாக டென்மார்க்கின் உதவியுடனும் வடக்கு கிழக்கு பத்திரிகையாளர்களுக்கு பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தவிர ஊடகவியலாளர்கள் இந்தியா சென்றும் ஊடகத்துறை பற்றி பயிற்சி பெற்று வந்திருக்கிறார்கள். ஊடகவியலாளர்களின் நெறிமுறைகள், செயற்பாடுகள் பற்றிய புதிய வெளிச்சம் ஊடகவியலாளர்கள் மத்தியில் கடந்தகால ஊடகச் செயற்பாடுகள் பற்றியும் வடக்கில் ஊடக நிலைமை பற்றியும் வெட்கமும் மனகிலேசமும் அடையவைத்துள்ளது. தாம் நடுநிலையாக எழுதவில்லை என்ற குற்ற உணர்வு பல ஊடகவியலாளர்களை வாட்டத் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில்தான் தமிழ் ஊடகவியலாளர்கள் தமிழ் தேசியத்திற்கு விசுவாசமாக இருக்க வேண்டும், அதில் தளர்வு நிலை இருக்கக்கூடாது என்ற குரல்களும் பத்திரிகையாளர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றன என்றவொரு அச்சுறுத்தலும் எழுகின்றன. இந்த பின்புலங்களில் ஆராய முற்பட்டால் உண்மையை இலகுவாக நெருங்கிவிட முடியும்.

அடுத்து சில ஊடகங்கள் ஊடகவியலாளர்கள் கொல்லப்படும் போது சிலவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவமும் இன்னும் சிலவற்றை ஒரு பொருட்டே இல்லாமல் செய்வதையும் அவதானிக்கலாம். சில தலைப்புச் செய்திகளில் மிக நீண்ட நேரம் தொடர்ச்சியாக இடம் பெறும். இன்னும் சில மிகக் குறுகிய நேரம் ஐந்தாவதோ, ஆறாவதோ செயதியாக இடம் பெறும் இவற்றை வைத்தும் யார் எந்தக் கொலையைச் செய்தார்கள் என்பதை பகுத்தறிவுள்ளவர்கள் உய்த்தறிய முடியும்.

நன்றி:- தமிழ்நியுஸ்வெப்
15-08-2005

# தோழர்கள் நகுலன், காந்தி மறைவிற்கு அஞ்சலி



தோழர் இரத்தினம் சர்வலோகநாதன் நகுலன் 45 அவர்கள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியின் நீண்டகால உறுப்பினர். யாழ் கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் 1980களின் ஆரம்பத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணயில் இணைந்து கொண்டவர்.

## ஈ.பி.ஆர்.எல்.எப்- பத்மநாபா

பாரிய பங்களிப்பைச் செய்தவர். 1980 களின் இறுதிப் பகுதியில் புலிகள் மாற்று இயக்கங்களின் மீது தாக்குதல் தொடுத்தபோது தோழர் நகுலனும் கைது செய்யப் பட்டார்.

அவருடைய சகோதரர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணயில் அங்கத்துவம் வகித்து பின்னர் 1980 களின் இறுதிப்பகுதியில் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

1990 களின் நடுப்பகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் வலிகாமம் பகுதியில் அங்கத்தவராகத் தெரிவானார். ஊரவர்களாலும் தோழர்களாலும் விரும்பப் பட்ட ஒருவர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான நகுலன் பிற் காலகட்டத்தில் அமைதியாக குடும்ப வாழ்வில் ஈடு பட்டிருந்தவர்.


அன்னாரின் மறைவிற்கு ஈ.பி.ஆர்.எல்.எப்- பத்ம

காந்தி - சிவகுரு நவரட்ணராஜா(39) முதலைக்குடா, மட்டக்களப்பு இரண்டு குழந்தைகளின தந்தையான இவர் முன்னாள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர். தற்போது ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு இல் வசிப்பவர். இவர் கட்சியின் சமூக, பொருளாதார அபிலாஷைகளுக்காக ஒரு தசாப்தத்திற்கு மேல் உழைத்தவர்.

1990களின் முற்பகுதியில் இந்தியாவிற்கு புலம் பெயர்ந்து அகதிகள் முகாமில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்தவர்.

1990 களின் நடுப்பகுதியில் இலங்கைக்கு வந்த போது புலிகளின் கெடுபிடிகள், படுகொலை அச்சுறுத்தல்கள் மத்தியில் செயற்பட முடியாத, வாழ முடியாத சூழ்நிலையில் இலங்கை இராணுவத்தில் இணைந்து கொண்டவர்.

யுத்தநிறுத்த காலத்தில் புலிகள் அரசியல் படுகொலைகள், இராணுவ பொலிஸ் உத்தியோகத்தர்கள்



விரோத செயறபாட்டின் அங்கமே காந்தி அவர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைத் தாக்குதல்.

அவர் காலைக்கடன்களை முடிப்பதற்கு சென்றிருந்த வேளையிலேயே கிளைமோர் தாக்குதல் மூலம் வஞ்சகமாக கொல்லப்பட்டார்.

அன்னாரின் மறைவிற்கு ஈழ மக்கள் புரட்சிகர

www.tamilarangam.net



# பாசிசம் இருக்கும் வரை கிடைக்கும் எந்த உரிமையுமே அனுட்டானத்திற்கு உதவாத கானல் நீர்.

மேற்கு நாடுகளிலே அரசியற் கொலைகள் மிக அபூர்வமாகவே நடைபெற்றுள்ளன. அமெரிக்காவிலே கென்னடி கொலை, மாட்டின்லூதர் கிங் கொலை, இரணடு மூன்று வருடங்களுக்கு முன் சுவீடன் வெளிவிவகார மந்திரி கொலை போன்ற அரசியல் கொலைகள் நடைபெற்றுள்ளன.

ஆனால் இலங்கையிலோ நாளாந்தம் அரசியல் கொலைகள் நடைபெறுகின்றன. அவை அத்தனையையும் பாசிசப் புலிகளே செய்து வருகின்றனர். ஈ.பி.டீ.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், கருணாகுழுவைத்தான் பாசிசப் புலிகள் கொல்கிறார்கள் என்றுதான் எண்ணினோம்.

ஆனால் பாசிசப் புலிகள் கோயில் குருக்களையும், கனகம்புளியடியின் வதனன் என்ற பாலகன், தப்பன் என்ற விவசாயி பெண்கள், வயோதிபர், புத்திஜீவிகள் என்று எல்லோரையுமே கொல்கிறார்கள்.

அண்மையில் நியூயோர்க்கில், இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மீதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக நியூயோர்க்கில் போன திங்களன்று இணைத் தலைமை நாடுகள் மேற்கொண்ட கலந்தாலோனையையடுத்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே "வன்முறைகளுக்கும், அமைதி சீர்குலைவுக்கும் எண்ணெய் வார்த்து வரும் இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் குறித்தும், இணைத் தலைவர்கள் கவலை தெரிவித்தார்கள். யுத்த நிறுத்த உடன்படிக்கையின் கீழ் இந்த ஆயுதக் குழுக்களை வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றுவதற்கும் இல்லையேல் அவற்றை நிராயுதபாணியாக்குவதற்குமான பொறுப்பு அரசுக்குண்டு. அரசின் இப்பொறுப்புக் குறித்து இணைத் தலைவர்கள் அதிருப்தி தெரிவித்தார்கள்."

இந்த ஏகாதிப்பத்திய நாடுகளின் தலைவர்கள் நாளாந்தம் அரசியல் கொலைகளைச் செய்யும் புலிப்பாசிசத்தை நிராயுதபாணியாக்க வேண்டும் என்று சொல்லாமல் பாசிசத்திற்கு எதிராக எவ்வளவோ நிராகுலமான சூழலில் வாழும் துணைப் படைகளை நிராயுதபாணியாக்க வேண்டும் என்ற கேலிக் கூத்தைச் செய்கிறார்கள்.

புலியளவு அரசியற் கொலைகளைச் செய்த கட்சியோ இயக்கமோ வரலாற்றில் இல்லை. நோர்வேயின் வெளிவிவகார மந்திரியையோ அல்லது அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளரை ஏதாவது ஒரு பயங்கரவாத இயக்கம் கொன்றிருந்தால் அந்த இயக்கமும் சரி அதை வக்காலத்து வாங்குபவரும் சரி இன்று உயிரோடு இருந்திருக்க மாட்டார்கள். அல்லது சிறைகளில் வாடுவார்கள். இலங்கையிலே சமூக உடமையாக்கப்பட்ட பொருளாதார அமைப்புமுறை முற்றாக ஒழியும் வரைக்கும் இந்த ஏகாதிபத்திய நாடுகள் புலியை அழிக்க விடமாட்டார்கள்.

புலிக்கும் ஏகாதிபத்திய காலனித்துவ நாடுகளைச் சுரண்டும் பொருளாதாரக் கொள்கைக்கும் இடையே ஒரு முரண்பாடும் கிடையாது. இலங்கையில் என்று பரிபூரண தனிச் சொத்துடமைமுறை நிலவுகிறதோ அன்றுதான் ஏகாதிபத்தியங்கள் புலியை அழிக்க உடன்படும்.

தமிழ் மக்கள் யோசிக்கிறார்கள், 60 ஆயிரத்துக்கு மேலான தமிழர்களைச் சிங்களவர் கொன்றார்கள் என்று. உண்மையிலேயே இந்த ஏகாதிபத்தியங்களே தமிழர்களைக் கொல்லுவித்தவர்கள். இலங்கையிலே சோஷலிச பொருளாதார அமைப்புமுறை வருவதைத் தடுப்பதற்கு தமிழருக் கெதிரான இனக் கலவரத்தைத் தூண்டித்தான் ஆகவேண்டியிருந்தது. சோஷலிசம் வருவதைத் தடுப்பதற்கு ஏகாதிபத்தியங்களுக்கு தமிழர் கொ

புலி போன்ற பாசிய இயக்கத்தை நசுக்குவதைப் பற்றிக் கதைக்காமல் பாசிசப் புலிகளுக்கு எதிராகப் போராடும் துணைப் படைகளை நிராயுதபாணியாக்குவது பற்றிக் கதைக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது.

இன்றுள்ள மாபெரும் பிரச்சனை இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு ஏதோ உரிமை தர வேண்டுமென்பது முதற் பிரச்சனையில்லை. உதாரணமாக ஒரு வாகனத்தின் லைட் பழுதாகிவிட்டால் அதைத் திருத்த முற்படும்பொழுது இயந்திரம் பிழைத்து விட்டால் முதலில் இயந்திரத்தைத்தான் திருத்த வேண்டும். அல்லது ஒரு சைக்கிளின் பகசிளைத் திருத்தும் பொழுது அச்சாணி உடைந்து விட்டால் முதலில் அச்சாணியைத்தான் திருத்த வேண்டும்.

அதே போலவே தமிழ் மக்களின் அத்தனை உரிமைகளையும் புலி பறித்துவிட்டு உலகநாடுகளில் ஒரு இடத்திலும் நடைபெறாத மட்டத்திற்குத் தமிழ் மக்களை ஒடுக்கும்பொழுது, பழைய உரிமைபற்றிப் பேசுவதல்ல. முதலில் புலிக் கொலைகளிலிருந்து தப்பிப் பிழைக்க வேண்டும்.

இந்தப் புதிய சகிக்கவொண்ணாத பிரச்சனையின் முன்னால் பழைய கோஷம் அர்த்தமற்றதாகும் ஆதலால் இன்றைக்கு கொழும்பு அரசாங்கம் சமஷ்டிதர வேண்டும், தமிழுரிமையைத் தீர்த்தாற்தான் புலி அழியும் என்று பேசுபவர்கள் எல்லாருமே அரசியல் அயோக்கியர்கள்.

நாம் ஒரு சின்ன உரிமைக்காகப் போராடப் புறப்பட்டு முழு உரிமையையுமே இழந்து புலி அடிமை ஆகிவிட்டோம். எந்தச் சட்டமும், எந்தச் சம்பிரதாயமும். எந்தத் தேசவழமையும், எந்த ஆன்மீக நன்நெறியும் புலியைக் கட்டுப் படுத்தாது. புலியின் பிரச்சார ஊடகங்களின் கடைந்தெடுத்த பொய்களெல்லாம் மறுத்துப்பேச முடியாத தாரகமந்திரமாகத் தமிழ்மக்கள் ஏற்றுத்தான் தீரவேண்டும் என்ற நிலையே நிலவுகிறது. புலி இயங்குவது எந்தத் தமழனின் நலனுக்காகவுமல்ல.

இலங்கை அரசாங்கம் உண்மையிலேயே தமிழ் விரோதிகளாக இருந்திருந்தால் தமிழ் மக்களுக்கு தொடர்ந்து உணவையோ மருந்து வகைகளையோ சம்பளங்களையோ அனுப்பியிருக்காது. தமிழ் மக்களும் துணிந்து நாலு லட்சம் பேர் கொழும்பில் குடியேறியிருக்க மாட்டார்கள். புலிகளும் இராணுவ புஷ்ப விமானங்களில் பவனி வரமாட்டாகள்.

தமிழ் மக்கள் புலி ஆதரவுத் தமிழர்களும் உட்பட புலிக்கே அதிகம் பயப்படுகிறார்கள். இது தான் இலங்கையில் வாழுகின்ற தமிழர்களதும் வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழர்களதும் உண்மையான நிலமை. இதை எந்தத் தமிழர்களும் சவால்விட முடியாது.

இலங்கைக்கு விடுமுறைக்குப் போக என்று எண்ணும்பொழுதே நந்தவன நடுக்கம் தொடங்குகிறது. பயத்தினால் எடுத்த விமானச் சீட்டை இரத்துச் செய்தவர்கள் அனேகம்.

புலிப் பாசிசத்தை வைத்துக் கொண்டு சமஷ்டிமுறை வருவதென்பது பாசிசத்தை மேலும் கெட்டியாக்குவதாகும். முதலில் பாசிசம் ஒழிந்து புலி நிராயுதபாணியாகும்வரை வேறு அரசியல் செய்வதென்பது புலிப்பாசிசத்தைக் கெட்டியாக்குவதாகும். கிட்லர் முசொலினி பாசிசத்திற்கு எதிராக சோவியத் யூனியனின் செம்படையினர் பிரஞ்சு, இங்கிலாந்து, அமெரிக்க ஏகாதி பத்தியப் படைகளோடு ஐக்கியப்பட்டு அன்னியோன்னியப்பட்டுப் போராடினது சரியென்றால் நாளாந்தம் தங்களையும் தங்களது தோழர்களையும் கொன்று குவிக்கும் புலிப் பாசிசத்திற்கு எதிராக இலங்கை ஆயுதப் படைகளோடு சேர்ந்து போராடுவதில்

கேள்வியும் எழுகிறது. இன்றைய தமிழ் மக்களது முதற்பணி எல்லாப் முற்போக்கு சக்திகளோடும் ஐக்கியப்பட்டு புலியை அரசியல் ரீதியாகவும் பௌதிகரீதியாகமும் அடிச்சுவடே இல்லாமல் அழித்த பின்புதான் மற்றைய உரிமைகள் பற்றிப் பேசவேண்டும்.

பாசிசம் இருக்கும் வரை கிடைக்கும் எந்த உரிமையுமே அனுட்டானத்திற்கு உதவாத கானல் நீர். புலியின் அழிவின் பின் ஒருகாலமும் பழைய சமுதாய முறை நீடிக்காது.

இன்று ஈ.பி.டீ.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் ,மட்டக்களப்புக் கருணா அணி போன்ற அமைப்புகள் மீண்டும் ஆயுதபாணி ஆகினால் மாத்திரம்தான் தம்மையும் தமது உறவினரையும், நண்பர்களையும், தோழர்களையும் பாதுகாக்கலாம். இந்த அமைப்புகளை நிராயுதபாணியாக்கின ரணில் விக்கிரமசிங்கா ஒரு நாளாவது புலி இந்த இயக்க உறுப்பினரைக் கொல்வதை நிறுத்துவதற்கோ பாதுகாப்பதற்கோ எந்த முயற்சியையும் செய்ய வில்லை.

தமிழ்மக்கள் இரண்டு எஜமான்களுக்குச் சேவை செய்யும் வரைக்கும் அவர்களது தொல்லை தீரப் போவதில்லை. இலங்கையிலே இரட்டை ஆட்சி நடிக்கும்வரை எவருக்குமே நிம்மதி இல்லை. ஒன்றில் புலிப் பாசிசத்தைத் தென்னிலங்கைக்கு விஸ்தரிக்கப்படும். அன்றேல் தென்னிலங்கை அரசோடு சேர்ந்து புலிப்பாசிசத்தை பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டும்.

இலங்கையிலிருந்து பிரிந்த தமிழ்கீரைப்பாத்தி நாட்டில் இலங்கையில் இருந்தளவு சுதந்திரமோ வாழ்கைத் தரமோ வராது. ஒடுக்குகின்ற பெரிய நாட்டிலே கிடைத்த சுதந்திரங்கூட பிரிந்துபோன சிறிய நாட்டிலே ஒருபோதும் கிடையாது. ஒடுக்குகின்ற பெரிய நாட்டிலேயுள்ள வாழ்க்கைத்தரம் ஒரு நாளும் பிரிந்த சிறிய நாட்டிலே வராது. இன்றைய பொருளாதார வளர்ச்சியின் மட்டமானது தேசங்களை ஐக்கியப் படுத்துவதற்குச் சாதகமானதேயொழிய தேசங்கள் பிரிவதற்குச் சாதமானதல்ல. எந்த உரிமையும் பொருளாதார செழுமை என்ற நிபந்தனைக்கு உட்பட்டது.

அழிந்துபோன இலங்கைப் பொருளாதாரத்திலே எவர்க்கும் எந்த உரிமையும் கிடைக்காது. சிங்களவர்க்கும் கூட. இன்றைய அவசரகாலச் சட்டப் பிரகடனம் அதன் ஓர் அம்சமாகும்.

ஏகாதிபத்தியங்கள் ஒரு நாளும் புலியை ஒடுக்க முன்வரப்போவதில்லை. தம்மைச் சோஷலிசவாதிகள் என்று சொல்லும் சோஷலிசத்தை நாளாந்தம் காட்டிக் கொடுப்பவர்களுக்கு புலி தமிழ் மக்களை வரலாறு கண்டு கேட்டிராத மட்டத்திற்கு ஒடுக்குவது தெரிந்தும் அதைப்பற்றி ஒரு வார்த்தை கூடக் கூறுவதில்லை.

சோஷலிச வலைத்தளம் நடாத்துபவர்களுக்கு புலியின் நாளாந்தக் கொலை தெரிவதில்லை. அவர்கள் மௌனத்தால் புலிக் கொலைகளை ஆதரிப்பதன் மூலம் தாம புலிக் கொலைகளிலிருந்து தப்பி மற்றவர்களின் கொலைகளுக்குத் துணை போகிறார்கள். தமிழ் மக்களுக்கு இன்றைக்கு அரசாங்கத்திடமிருந்து ஏதும் உரிமை பெறுவதல்லப் பிரச்சனை. புலிக் கொலைகளிலிருந்து எவ்வாறு உயிர் தப்புவது என்பதுதான் முதலாவது பிரச்சனை.

தமிழ் மக்களுக்குச் சோஷலிசம் கொண்டுவருவதாகச் சொல்லிக்கொண்டு புலியைப்பற்றிப் பகிரங்கமாக ஒரு வார்த்தைகூடப் பேசாத கோழைகளோடும், துரோகிகளோடும், தமிழர்களும், தொழிலாளர்களும் கணக்குத் தீர்க்க வேண்டிய நாட்கள் கன தூரத்தில் இல்லை.

இரண்டு சோஷலிசக் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலிலே போட்டியிடு

ளாந்த அரசியற் படுகொலைகளைப் பற்றி ஏதாவது கூறியிருக்கிறார்களா?

ஏகாதிபத்திய சதிகாரர்களின் அடுத்த விவாதம் என்னவென்றால் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே யுத்தம் நிகழ்ந்தால் இரண்டு-தரப்பும் வெல்ல இயலாதாம். என்ன கேலிக் கூத்து. இன்னுமொரு யுத்தம் தொடங்கினால் கிழக்கு மாகாணத்தைவிட்டு புலிகள் 24 மணித்தியாலத்தில் வெளியேறுவது திண்ணம். வட மாகாணத்தில் உள்ள தமிழர்களும் புலிக் கெதிராக எழுச்சி கொள்ளுவது திண்ணம் அல்வாயிலே புலிக்கெதிராகப் புலிகளின் வீடுகளை எரித்த நிகழ்ச்சிகள் ஏற்கனவே நடைபெற்றுவிட்டது.

புலிவிரோத அரசியற் சக்திகளுக்கு முன்னால் மீண்டும் ஓர் மாபெரும் கைங்கரியத்தையும் கடமைப் பாட்டையும் வரலாறு திணித்துள்ளது. அது 1983விட மிகப் பெரியது .

கடினமானது. அதுதான் புலிக்கெதிராக மீண்டும் ஆயுதமேந்திய எழுச்சியை மேற்கொள்ள வேண்டும்.

கதிர்காமரைக் கொன்ற பொழுது சந்திரிக்கா குமாரதுங்கா நடந்துகொண்ட விதத்திலிருந்தே அவர்கள் எந்த மட்டத்திற்குப் புலியைப் பாதுகாக்கிறார்கள் என்பது தெளிவு. எந்தப் பாசிசமும் பேச்சுவார்த்தை மூலம் தானகவே தானெடுத்து ஆயுதத்தைப் போட்டது கிடையாது.

புலிப் பாசிசத்தோடு பேசவேண்டும் என்பவர்கள் எல்லாம் கயவர்கள். ஏகாதிபத்தியங்களால் இரண்டுதசாப்த யுத்தத்தை இலங்கையிற் திணித்தும் ஏகாதிபத்திய உலகமயமாகிய எல்லையற்ற சுரண்டலும் நித்திய நிரந்தர வறுமைக்கு மேற்ற சூழல் ஏற்படவில்லை.

ஏகாதிபத்தியங்கள் புலிப் பாசிசத்திற்கு எதிராக தமிழ் மக்களிடமிருந்து சின்ன எதிர்ப்பு வருவதைக் கூட விரும்பவில்லை. மறுபக்கத்தில் தமிழ் மக்களுக்குள் ஆதிக்கம் செலுத்தக் கூடிய எந்தவித லிபரல்வாத அரசியற் தலைமைகளும் தற்பொழுது இல்லை. தமிழ் மக்களுக்குள்ளே இப்பொழுது புலியைத்தவிர ஏகாதிபத்தியத்திற்குச் சேவை செய்யக் கூடிய தலைமைகள் எதுவும் இல்லை.

இந்த யதார்த்தமே ஏகாதிபத்தியங்கள் புலியை அழியவிடாமற் பாதுகாப்பதற்கான காரணம். புலிக்கெதிராக ஆயுதமேந்திப் போராடுபவர்களைப் பலப்படுத்துவோம்.

புலியின் குட்டிமுதலாளித்துவ, உதிரிகளாலான ஸ்தாபனச் சேர்மானம், புலியின் தொழிலாளி வர்க்கவிரோதம், புலியின் ஜனநாயகவிரோதம், புலியின் சர்வாதிகாரம், புலியின் தலைவர் கலாச்சாரம், புலியின் வதைமுகாம் சித்திரவதை, புலி கசக்கிப் பிளிந்து கறக்கும் அடிமை உழைப்பு முறை, புலியின் இனச் சுத்திகரிப்பு, புலியின் சர்வதேச சட்ட மீறல்கள், புலியின் ஒப்பந்த மீறல், புலியின் ஏகாதிபத்திய அடிவருடித்தனம், புலியின் மாற்று ஸ்தாபன விரோதம், புலியின் பொய்ப் பிரச்சாரம், எல்லாமே முழுக்க முழுக்க பாசிசமயம்.

ஆதலால் புலிகளின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கெதிராக போராடவேண்டும்.

நன்றி:- தேனிடொட்கொம

## யுத்த நிறுத்த......

04ம் பக்கத் தொடர்ச்சி

படைகளின் கட்டளைக்கும் ஒழுக்காற்றுக் கட்டமைப்புகளும் கீழ் ஒன்றிணைத்து வடககு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால் சேவையிலமர்த்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

இவ்வாறு 1.8 சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை புலிகள் திரிபுபடுத்தி கூறிவருவதுடன் அரசியல் படுகொலைகளையும் புரிந்துவருகின்ற வேளையில் சரத்து 1.8 இன் உள்ளடக்கம் குறித்து தெளிவுபடுத்த வேண்டியது யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு வினதும், அனுசரணையாளர்களினதும் கடமையாகும்.

ஆனால் இன்றுவரை இதுகுறித்து அவர்கள் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. ஆனால் படுகொலைகள் நடந்து முடிந்த பின்னர் படுகொலைகள் தவிர்க்கப்பட வேண்டும் என தவறாமல்–கூறிவருகிறார்கள். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் போநிறுத்தத்தின் முறைமைகள என்ற உறுப்புரை 1 இன் 1.8 சரத்து குறித்து அடிக்கடி கூறிவரும் தமிழ்செல்வனுக்கும் இதர புலித் தலைவர்களுக்கும் அதே உறுப்புரையில் முன்னுள்ள 1.2 சரத்து கண்ணில் படுவதில்லை.

புலிகள் இதனை செவ்வனே கடைப்பிடிப்பார்களானால் வடக்கு கிழக்கில் வன்முறைக்கோ, படுகொலைகளுக்கோ இடமில்லாது போயிருக்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் 1.2 சரத்த குறிப்பிடப்பட்டிருப்பதாவது 1.2 எந்தத் தரப்பும் எந்த வகையான இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளிலும் ஈடுபடலாகாது. அனைத்து இராணுவச் செயற்பாட்டினதும் முழுமையான நிறுத்தம் இத்தால் வேண்டப்படுகின்றது. இது பின்வருவன போன்ற செயல்களை உளளடக்கும், ஆனால் அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்பட்டதாக அமையாது.

(அ) நேரடியான அல்லது மறைமுகமான ஆயுதங்களால் சுடுதல், ஆயுதந்தாங்கிய தாககுதல்கள், மறைந்திருந்து செய்யப்படும் தாக்குதல்கள், கொலைகள், ஆட்கடத்தல்கள், குடிமக்களது அல்லது இராணுவத்தினது சொத்துக்களை அழித்தல், நாசகாரச் செயல்கள், தற்கொலைத் தாக்குதல்கள், ஆழமாக ஊடுருவும் படையணிச் செயற்பாடுகள்.

யுத்தநிறுத்தத்தை மதித்து இவற்றில் எதையாவது புலிகள் தவிர்த்திருக்கிறாகளா? இங்கு முனனர் குறிப்பிட்டது போன்று யாழ் மாவட்டத்தில் புலிகளுக்கு எதிராக துணை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் என்று எதனையும் குறிப்பிட்டு சொல்ல முடியாது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் 2003 தெடக்கம் இன்று வரை இரண்டு வருடகாலத்தில் மட்டும் புலிகள் யாழ் மாவட்டத்தில் 40க்கும மேற்பட்டவ்களை புலிகள் சுட்டும், வெட்டியும் திட்டமிட்டுப் படுகொலை செய்திருக்கிறார்கள்.

யுத்தநிறுத்தத்தை மதித்து இவற்றில எதையாவது புலிகள் தவிர்த்திருக்கிறார்களா? இங்கு முன்னர் குறிப்பிட்டது போன்று யாழ் மாவடத்தில் புலிகளுக்கு எதிராக துணை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் என்று எதனையும் குறிப்பிட்டு சொல்ல முடியாது ஆனால் 2002 பெப்ரவரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் 2003 தெடக்கம் இன்று வரை இரண்டு வருடகாலத்தில் மட்டும் யாழ் மாவட்டத்தில் 40க்கும் மேற்பட்டவர்களை புலிகள் சுட்டும், வெட்டியும் திட்டமிட்டுப் படுகொலை செய்திருக்கிறார்கள்.

கொலைகளை தடுத்து நிறுத்த நினைப்பவர்கள் யாராயினும் இந்த கொலைகள் என்ன நோக்கத்துடன் புரியப்படுகின்றன என்பதை தெரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். கொலையின் நோக்கம், கொலை செய்யப்படுபவர்கள் யார் என்பதிலிருந்து இந்த கொலைகளை யார் புரிந்திருக்கிறார்கள் என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

ஆனால், யார் செய்கிறார்கள் என்பதற்கு ஆதாரம் இல்லை, இது சட்டம் ஒழுங்குப் பிரச்சினை, வடக்கு கிழக்கில் அரசும் புலிகளும் படுகொலைகளை நிறுத்த வேண்டும் என்று தெளிவில்லாதது போலவும், பொதுமைப்படுத்தியும் வெளியிடப்படும் கருத்துக்கள், அறிக்கைகள் படுகொலைகளை புரிபவர்களுக்கு அவற்றை நிறுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக படுகொலைகளுக்கான குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர்களை பிணை எடுப்பதாகவே அமைந்து விடுகின்றன. இதுவும் படுகொலைகள் அதிகரித்து இன்றைய நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

வடக்கிலும், கிழக்கிலும், கொழும்பிலும் படுகொலைகள் இடம்பெற்றிருக்கின்றன ஆனால் கிழக்கில் உள்ள நிலமைகளுடன், வடக்கில் உள்ள நிலமைகளை ஒப்பிட முடியாது. எனவே அரசியல் படுகொலைகள் தடுக்கப்பட முடியாவிட்டாலும் அவற்றை குறைப்பதற்கு யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவும் அனுசரணை வழங்கும் நோர்வே அரசாங்கமும் உருப்படியான நடவடிக்

www.tamilarangam.net



# ஊடக பயங்கரவாதம் Who killed Cock Robin?

# பி.பி.சி தமிழோசையும், உதயன் பத்திரிகையும், படுகொலை செய்யப்பட்ட நகுலன் மீது சேறடித்தன



இரத்தினம் சர்வலோகநாதன (நகுலன்)- வயது 45, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் நீண்டகால அங்கத்தவர். முன்னாள் யாழ்ப்பாணம் வலிகிழக்கு பிரதேசசபை அங்கத்தவர், இவர் வவுனியா நகரத்திலிருந்து கண்டி வீதி தேக்கவத்தையிலுள்ள தனது வீட்டிற்கு அத்தியாவசியமான பொருட்களை வாங்கிச் செல்கையில் 16ந் திகதி செப்டெம்பர் இரவு 9.45 மணியளவில் வவுனியா மகா வித்தியாலயத்திற்கு முன்பாக தலையிலும், நெஞ்சிலும் ஐந்து, ஆறுமுறை சுடப்பட்டு வீதியில் வீழ்ந்தார்.

அவர் தனது பிள்ளைகளுக்கு வாங்கிச் சென்ற ஐஸ் கிரீம் அவரது குருதியுடன் கரைந்து உருகி ஓடியது. நிராயுதபாணியாக, தன்னந்தனியாக ஆள்நடமாட்டம் இல்லாத இரவு வேளையில் அனாதரவாக, குரூரமாக படுகொலை செய்யப்பட்ட மனிதனை பற்றி பி.பி.சி யின் வவுனியா செய்தியாளர் மாணிக்கவாசகமும், உதயன் பத்திரிகையும் படுகொலை செய்யப்பட்டவரை கேவலப்படுத்தும் நோக்கில் செய்தி வெளியட்டிருந்தன.

பி.பி.சியின் வவுனியா செய்தியாளர் மாணிக்கவாசகம் அவரிடமிருந்த இராணுவ அடையாள அட்டையிலிருந்து படுகொலை செய்யப்பட்டவர் யாரென அடையாளம் காணப்பட்டதாக தனது பி.பி.சி தமிழோசை விபரிப்பில் தெரிவித்திருந்தார்.

உண்மையில் வடக்கு கிழக்கில் மாணிக்கவாசகர் உட்பட பொது மக்கள் அனைவருக்கும் படையினரால் அடையாள அட்டைஒன்று வழங்கப் பட்டுள்ளது.

இதில் படுகொலை செய்யப்பட்ட ரத்தினம் சர்வலோகநாதனின் (நகுலன்) இராணுவ அடையாள அட்டையிலிருந்து கிடைத்த தகவல்களின் படி என அழுத்தியுரைப்பது நகுலனை அவதூறு செய்யும் நோக்கத்தையும் அந்தக் படுகொலையை நியாயப்படுத்தும் உள் நோக்கத்தையும் கொண்டிருந்தது.

இதேபோல் உதயன் பத்திரிகை நகுலன் படுகொலை செய்யப்பட்ட மறுநாள் பத்திரிகையில் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் அவர் வீட்டுக்குத் தேவையான பொருட்களுடன் குடிபானங்களையும் கொண்டு சென்றிருந்தார் என்று குறிப்பிட்டிருந்தது.

ஒரு மனிதன் குடிப்பது தொடர்பாக குடிபானத்தை வீடுக்கு கொண்டு போவது தொடர்பாக இவர்களுடைய ஆசாடபூதித்தனத்தை இன்னொரு சந்தர்ப்பத்தில் இன்னொரு சந்தர்ப்பத்தில் விலாவாரியாக பார்ப்போம்.

ஊடகவியலாளர் சிவராம் கூட மதுபான விடுதியிலிருந்த வெளியே வரும் போதுதான் கடத்திச் செல்லப் பட்டார்.

யாழ்ப்பாணத்தில் அமெரிக்கத் தூதரக அதிகாரியொருவர் யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுடன் (உதயன் பத்திரிகை ஊடகவியலாளர்கள் உட்பட) மதியபோசன விருந்தொன்றில் கலந்து கொண்டதற்காக அமெரிக்கத் தூதரக புலனாய்வு அதிகாரியுடன் சேர்ந்து பியர் அருந்துவதாக படம் பிரசுரித்து செய்தியொன்றை சில வாரங்களுக்கு முன்னர் புலிகளின் ஊடகமான நிதர்சனம் டொட் கொம் எழுதியிருந்தது. இங்கு பியர் அருந்துவது ஒன்றும் பிரச்சினையான விடயமல்ல. ஊடகவியலாளர்கள் அமெரிக்க தூதரக அதிகாரியை சந்திப்பது ஊடகவியலாளர்கள் என்ற ரீதியில் அவர்களுடைய உரிமை தொடர்பான விடயம் ஆனால நிதர்சனம் டொட்கொம் அவ்வாறு எழுதியது அவர்களை கேவலப்படுத்துவதற்கும், அவர்களை அச்சுறுத்துவதற்குமாகும்.

Who killed CockRobin ? என்ற சக பறவைகளின் சோகம்தான் வவுனியாவில், அல்லது நகுலனைத் தெரிந்தவர்களிடம், லோகன் என்று வாஞ்சையுடன் அழைக்கும் அவரது ஊரவர்களிடம், சக தோழர்களிடம் நிலவுவது. இங்கு கொலை செய்தவர்கள் யார் என்பது எல்லோருக்கும் தெரியும். யாருக்கும் தீங்கு நினைக்காத வெளிப்படையாக பேசும் நகுலனின் பேரவலமான மரணம் அந்த சக பறவைகளின் சோகத்தை ஒத்ததே.

இந்த இரண்டு ஊடகங்களிலும் நகுலனை அவதூறு செய்யும் எத்தனங்கள் இருந்தன.

ஒன்று அவர் இராணுவ சம்பந்தமுடையவர் எனச் சித்தரிப்பது. மற்றது போலி ஒழுக்கங்களின பேரில் அவரை அவதூறு செய்வது.

பாசிஸ்டுக்களின் ஊதுகுழல் பிரசாரகர்களின் நோக்கம் இங்கு பகுத்தறிவுள்ள, நாகரீகமான மனிதர்களால் புரிந்து கொள்ளக்கூடியதே.

நகுலனின் படுகொலை மரணத்தை அவருடன் பழகிய சாதாரண சிங்கள மக்கள் "அபராதேய தெய்யனே பவ்" என்றார்கள். அவருடன் பழகிய சாதாரண தமிழர்கள் பாவம் அப்பிராணி என்றார்கள். அவருடைய வீடு இருந்த இடம் சிங்கள தமிழ் மக்கள் கலந்து வாழும் பிரதேசம் என்றபடியால் இப்படி உணர்ச்சிக் கொந்தளிப்புக்களும் வெளிப்பட்டன. –

# மா:பியாக்களை தலைவர்களாக................

1ம் பக்கத் தொடர்ச்சி

இங்கு யாழ்நகரின் நடுநயமாக விளங்கும் கல்லூரியன் அதிபராக அசாதாரண திறமையுடன் அவர் செயற்பட்டது அவரின் உயிரை காவு கொண்டது.இங்கு என்கடன்பணி செய்து கிடப்பதே என கனவிலும் நினைவிலும கல்லூரியின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்திருந்த இராசதுரை வாத்தியாரைக் கொன்று குரு சங்காரம் நிகழ்த்தினார்கள்.

1995 சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் வானமே கூரையாக சுவரெல்லாம் பொட்டல் வெளியாக காட்சியளித்த மத்திய கல்லூரியை அதன் சாம்பரிலிருந்து உயிர்ப்பிப்பதற்கு இராசதுரைவாத்தியார் வழங்கிய பங்களிப்பிற்கு ஆயிரக்கணக்கான பெற்றோரும் மாணவரும் பொதுமக்களும் சாட்சி.

மத்திய கல்லூரி கிழிந்து போய் கிடந்த போது தான்- அது யுத்தத்தின் கோரச்சின்னமாக காட்சியளித்துக் கொண்டிருந்த போது தான் இராசதுரை வாத்தியார் அங்கு போய்க் குடியேறினார்.

"பாருங்க தம்பியவ இந்த பேய்மண்டபத்தில் தான் நான் குடியிருக்கிறன்" என்பார் நகைச் சுவையாக. அவர்கட்டிடத்தின் திருத்த வேலைகளை கண்காணித்துக் கொண்டும், ஆலோசனைகளை வேலையாட்களுக்கு வழங்கிக் கொண்டும் வேலையை கூர்ந்து கவனித்து கொண்டும் பேசுவார்.

அந்த வெறிச்சோடிய அச்சமூட்டும் நாட்களில் இராச துரைவாத்தியார் போன்ற மனிதர்கள் யாழ்ப்பாணத்தில் மனித உயிர்ப்பை கொஞ்சம் கொஞ்மாகப் பூசிக் கொடிருந்தார்கள். அந்த இக்கட்டான நேரத்திலும் அவரது கலகலப்பான பேச்சு பெரு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கும்.

"கல்லும் சாந்தும் கொண்டு கட்டிய கட்டிடங்கள் கல்விக் கூடங்கள் ஆகா" என்ற காந்தியடிகளின் வாக்கிற்கிணங்க அங்கு உயிர்த்துடிப்புள்ள ஒரு புதிய கல்விப்பாரம்பரியத்தை உருவாக்குவதில் இராசதுரை அவர்களின் பங்களிப்பு மகத்தானது.

"வேதாளம் சேர்ந்து வெள்ளெருக்

கடாட்சத்தை கொடுவந்து சேர்த்தார் ராசதுரை வாத்தியார்.

யாழ்மத்தியின் உள்ளும் வெளியும் அவரது மூச்சுகாற்றும் கலகலப்பும் அவரது மரண அவஸ்தையின் இறுதி விசும்பலும் கலந்திருக்கும். மத்தியகல்லூரியைச் சூழ்ந்திருந்த வேப்பமரங்கள் சோகத்தில் சலனமற்று உறைந்து போயிருக்கும். அந்த மரங்களில் குடியிருக்கும் பறவைகள் ஒரு இனம் புரியாத பிரிவுத்துயரை உணர்ந்திருக்கும். பண்ணைக்கடல் அழுது வடித்திருக்கும். சப்பல் தேவாலய மணி ஈனஸ்வரத்தில் ஒலித்திருக்கும். யாழ்நூக வாயிலில் சிலையாக குடியிக்கும் சரஸ்வதி ஒரு கணம் மூர்ச்சை உற்றிருப்பாள். காற்றுஒருகணம் சூறையாகி மெதுவாக மௌனித்திருக்கும். இராச துரைவாத்தியாரின் உயிரற்ற உடல் வீரசிங்க மண்டபத்தின் முன்னால் வீழ்த்தப்பட்ட போது அந்த மணிக் கூட்டு கோபுரம் மீண்டும் ஒரு மரணத்தின் சாட்சியாக நின்றிருக்கும். அதன்முள் அந்த மாலை 3 மணிக்கு அதிர்ந் தோய்ந்திருக்கும்.

அவர் கல்லூரியின் அபிவிருத்திக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் யாழ்மத்தியில் கல்வி என்ற வெளிச்சத்தை பிரகாசமாக்கிகொண்டிருந்த போது அறிவின் எதிரிகள், மானிடத்தின் எதிரிகள் காரிருளை சூழவைத்தனர். நந்தன் சிதம்பரம் போவதா செல்லன் கந்தையன் யாழ்நூலகத்தை திறந்து வைப்பதா இராசதுரை வாத்தியார் யாழ்மத்திய கல்லூரியில் கல்விப்பணிசெய்வதா என்ற சாதிய அதிர்ச்சியை இங்கு குறைத்து மதிப்பிட முடியாது.

பிரபகாரனின் மகன் சாள்சிற்கு 10ஆம் வகுப்புச் சோதனையில் 10டி. துவாரகாவிற்கு 9டி வாத்தியார்களின் உதவி இல்லாமல் இது நடந்திருக்காது. பிரபாகரன் சயனைட்டை ஊர்பிள்ளைகளின் கழுத்தில் கட்டி விட்டு தனது பிள்ளைகளுக்கு 10 டி வரப்பண்ணியவர். கல்வித்தகுதியை துப்பாகி மிரட்

பிரபாகரனின் மாமனார் ஏரம்புவாத்தியார் நோய்வாய்பட்டு இறந்தபோது ஊரைக் கூட்டி அழச்சொன்னார்கள். டென்மார்கிலிருந்தும் வேறுநாடுகளிலிருந்தும் கட்டுநாயககாவில் வந்திறங்கிய உறவுகள் அரச இராணுவ கொமாண்டோக்களின் பாதுகாப்புடன் வன்னி வந்து செத்த வீடுகொண்டாடி, மைத்துனர், மைத்துனி, அக்காள் மருமக்கள், உறவுகொண்டாடி கொமாண்டோ பாதுகாபபுடன் திரும்பிச் சென்றார்கள்.

ஆனால் இராசதுரை மாஸ்டர் வீரசிங்க மண்டபத்திற்கு முன்னால் உள்ள பூவரச மரத்தடியில் அனாதரவாக கோழைத்தனமாக வீழ்த்தபட்டார். அம்புபட்ட பறவையாக அவரின் உயிர்துடித்தடங்கியபோது அவருடைய ஆன்மபலமுள்ள நேர்மையான சகஆசிரியர்களும் மாணவர்களும் அவருடலைத் தாங்கி கொண்டார்கள். இராசதுரை வாத்தியார் ஊர்ப்பள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக ஒரு இயக்கத்தையே நடத்தியவர், முயற்சித்தவர்.

இராசதுரைவாத்தியார் யாருடைய காலில் விழுந்தாவது பிச்சை எடுத்தாவது கல்லூரியை முன்னேற்ற வேண்டும் என்று முயன்றவர்.

பிரபாகரனும் மதிவதனியும் தாங்கள் பெற்ற மகவுகள் 10 டி எடுத்ததற்காக நிச்சயம் புழகாகிதம் அடைந்திருப்பார்கள். அவர்களின் வெற்றி செயற்கையானதோ இயற்கையானதோ அவர்களின் ஏற்றம் நிச்சயம் புல்லரிப்பை ஏற்படுத்தியிருக்கும்.

இராதுரை வாத்தியரின் பிள்ளைகளும், மனைவியும் உற்ற சுற்றமும் சிவகடாட்சம் மாஸ்டரின் மனைவி பிள்ளைகளும் தெருவில் கண்ணீரும் கம்பலயுமாக அலையட்டும்.

தமிழர்கள் இதனை தமிழன் பெருமை வீரச் செயல் எனப்பாராட்டட்டும்.

தூ! வெட்கம் கெட்ட ஈன இரக்கமற்ற காட்டு மிராண்டிப்பிறப்புக்கள்.

வாத்தியாரின் குடும்பங்களை தெருவிற்கு அனுப்புவதை ஆதரிக்கும் சமூகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பாலிய வயது பாடசாலை ஆசிரியரை தமது வயோதிபத்திலும் மறவாது நினைவு கூரும் மனிதர்களை கொண்ட சமூகமா இப்படி.

"நல்லதோர் வீணைசெய்து அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ" என்று பாரதி பாடினான்.

ஆனால் இவர்கள் கல்விக்கு - அறிவுக்கு நெருப்பு வைத்திருக்கிறார்கள்.

நாங்கள் காட்டு மிராண்டிகள் என மீண்டும் மீண்டும் பிரகடனம் செய்கிறார்கள்.

பிரபாகரனும் மனைவியும் நன்றாக சுகித்திருக்கட்டும். பிள்ளை குட்டிகளுடன் சந்தோசிக்கட்டும். இராசதுரைவாத்தியார் சிவகடாட்சம் மாஸ்டர் தெருவிலே சாகட்டும்.

வாழ்க தமிழர் வீரம்

வாழ்க தமிழர் பண்பாடு

வாழ்க தமிழரின் கல்வியுணர்வு

வாழ்க சூரிய தேவன்

குருவைக்கொல்பவர்கள் மாதாவையும் பிதாவையும் கொல்லத்தயங்கமாட்டார்கள். அதனைச் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் தேசத்தின் ஆன்மாவை அழிக்கிறார்கள். வேலுப்பிள்ளையும் மனைவியும் தமது மைந்தனால் கொல்லப்படமாட்டார்கள் என்பதற்குந்த உத்தரவாதமும் இல்லை.

தந்தை மகற்காற்றும் உதவி அவயத்து (கற்றோர் அவை) முந்தியிப்பச் செயல்.

நிச்சயமாக வேலுப்பிள்ளையர் மனதிற்குள் அழுது கொண்டுதான் இருப்பார்.

பாடசாலை அதிபரை பாடசாலையில் வைத்தே தும்புத்தடியால் அடித்த திருஞான சம்பந்தரல்லவா சூரியதேவன் தொட்டில்பழக்கம் சுடுகாடு மட்டும்.

அராஜாகத்தின் அழுகிய பிணநெடியின் மத்தியில் தமிழர்கள் மனித நாகரிகத்தை கண்டு பிடிக்கவேண்டும்.

துரதிஸ்ட வசமாக இந்த பிணவாடையை சுகந்தம் எனக்கருதும் காட்டு மிராண்டிதனம் தமிழர்களிடம் மேலோங்கிக் காணப்படுகிறது.

தமிழர்களின் மண நுகர்ச்சி சோணைகளுக்கு தீவிர சிகிச்சை தேவை

கல்வியை மூலதனமாகக் கொண்ட சமூகத்தில் இது ஒரு பாரதூரமான நிலையாகும்.

தனது பிள்ளைகள் கல்வி பெறவேண்டும் என்று எமது எந்த ஏழைத்தாயும் கனவு காண்பாள். பணம், பொருள் அல்ல அவளது கனவு.

போதை வஸ்து வியாபரத்திலும், ஊரை அடித்து உலையில் போடுவதையும், சிறுபிள்ளைகளை வெடிகுண்டுகளாக மாற்றி தமது வன்முறை கடையை விரிப்பவர்களுக்கும் இது புரியவே புரியாது.

அதிபர்கள், ஆசிரியர்கள், பெண்கள, சிறுவர்,சிறுமியரை படுகொலை செய்வது, கடத்துவது சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் என்பன எமது சமூகம் எந்தளவு தூரம் காட்டுமிராண்டி மயப்பட்டிருக்கிறது என்பதை புலப்படுத்துகிறது.

எமது ஆசான்களுக்கு சூரியதேவன வழங்கிய இரட்சிப்பு மரணம் மாத்திரமே.

குறிப்பு: இராச துரைவாத்தியாரின் குடும்பத்தினருக்கு ஆக்கத்திறமையுண்டு. 1970 களின் முற்பகுதியில் கலாநிதி என்.எம் பெரேரா நிதியமைச்சராக இருந்த காலத்தில் இராசதுரை வாத்தியாரின் சகோதரர் நடராசா அவர்கள் பனம பொருள் அபிவிருத்திச் சபையை ஆக்கும் பணியை ஏற்றார். இன்று வரை பனம் பொருள் அபிவிருத்திச் சபை வெற்றிகரமாக உயிர் வாழ்கிறதென்றால் அதற்கு அடித்தளமிட்டு வளர்த்தவர் இசதுரை வாத்தியாரின் சகோதரர் நடராசா வாத்தியார். அது இன்று பல்லாயிரக்கணக்கான கள்ளிறக்கும் தொழிலாளர்கள் எங்கள் கிராமங்களின் ஏழைகளுக்கு வாழ்வளித்துக்கொண்டிருக்கிறது.

இராசதுரை வாத்தியார் அழிவிலிருந்து மீண்டெழுதல், நம்பிக்கையை கட்டியமைத்தல் என்ற பணியை ஆற்றியவர்.

அவருடைய மைத்துனரான காலஞ்சென்ற பற்குணம் வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்தில் புனர்வாழ்வு புனர்நிர்மாண அதிகாரியாக பணியாற்றியவர். இலக்கிய

www.tamilarangam.net



# ரஜினிதிராணகம படுகொலை தொடர்பான வெளிவராத உண்மைகள்



**என் சத்தியப்பதிவு 21-09-2005**

**எங்கள் மெடம் ராஜினி**

**ஒரு கலங்கரை விளக்கு**

1989ம் ஆண்டு செப்டெம்பர் 21ம் திகதி, எங்கள் அன்புக்குரிய மெடம் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் தன் கடமையை முடித்து விட்டு வீட்டிற்குப் போகும்போது வீதியில் வைத்து கோழைத்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டார். அவரையும் அவரது நேர்மையையும் நேருக்கு நேராக முகம கொடுக்க முடியாத தமிழீழ விடுதலைக் கோழைகள் முதுகுப் புறமாக வந்து அவரைச் சுட்டுக் கொன்றனர்.

இந்தக்கோழைத்தனமான கொலையைக் கண்டித்து மருத்துவபீட மாணவர்களும் ஏனைய பல மாணவர்களும் எமது கைகளால் சுவரொட்டிகளை எழுதி யாழ்ப்பாணம் எங்கும் ஒட்டினோம். அப்போது எமது விடுதலைப் போராட்டத்தைப் பற்றி எனக்குள் எழுந்த உணர்வை நான் பின்வருமாறு ஆங்கிலத்தில் எழுதினேன். இதுவும் ஒரு சுவரொட்டியாக அப்போது ஒட்டப்பட்டது.

**Free Doom & Free Dump**

**Is Our Freedom...?**

இன்றோடு எங்கள் மெடம் கொல்லப்பட்டு 16 வருடங்கள் ஓடிவிட்டன. அவர் கொல்லப்பட்டு 15வருடங்களின் பின்னராவது அவரைப்பற்றி ஒரு திரைப்படம் எடுக்கப்பட்டிருப்பது மிகவும் நன்றிக்குரிய விடயம்தான்.

ஆனால் இன்னும் அவரைக் கொன்றவர்களைப் பற்றிய பல உண்மைகள் சரியாக வெளிவரவில்லை என்பதுதான் மிகக் கவலையான விடயமாகும். இதற்குக் முக்கிய காரணம் எம்மிடமிருந்த தத்தமது உயிர் பற்றிய பயம் பிரதானமானதாகும் அதேவேளை நாம் உண்மைகளைச் சொன்னால் அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனோ நிலையில் எமது சமூகம் இருக்கிறதா என்ற சந்தேகமும் எனக்கு உண்டு.

இன்றல்ல 1989 இல் மெடம் கொல்லப்பட்ட போதும்கூட அவரை யார் கொன்றார்கள் என்ற உண்மையை எமது சமூகம் வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை என்பதை நான் கண்டேன்.

அப்போதும்கூட பலருக்கு அந்த உண்மை தெரிந்திருந்தும் அதை வெளிப்படையாக ஏற்றுக் கொள்வதற்கு துணிச்சல் இருக்கவில்லை. ஆனால் அந்த உண்மையை தமக்குள் மனதளவில் ஏற்றுக் கொண்டவர்களும் பலர் இருந்தார்கள் எனபதும் மறுபக்க உணமைதான். அவ்வாறு உண்மை தெரிந்து உள்ளுக்குள் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவன். அன்று ஏனைய பலரைப் போன்று எனது உயிர், எனது எதிர்காலம் என்று நானும் இந்த உண்மைகளை எனக்குள் போட்டு அமுக்கிக் கொண்டேன்.

தற்போது நான் என் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடொன்றில் ஒரு வைத்தியராக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். ஆனால் இன்னும் நாட்டில் பல ஒடுக்கு முறைகளுக்கு மத்தியில் வாழும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களோடு ஒப்பிடுகையில் எனது எதிர்காலத்திற்கும் உயிருக்கும் இவ் வெளிநாட்டில் அதிக உத்தரவாதம் இருக்கிறது. அந்த வகையில் மெடத்தின் கொலை தொடர்பாக எனக்கு தெரிந்த சில உண்மைகளை இன்றாவது வெளியிடுவது எனது கடமை என்று நினைக்கிறேன்.

எமது அன்புக்குரிய மெடம் கலாநிதி ராஜினி திரணகம அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட போது நான் அங்கு மருத்துவபீட மாணவனாக இருந்தேன். அவர் எங்களுக்கு வெறும் உடற்கூற்றியல் விரிவுரையாளராக மட்டும் இருக்கவில்லை. அவரின வகுப்புகள் எப்போதும் மிக உற்சாகம் நிறைந்ததாகவே இருக்கும். தனது அன்றாட விரிவுரைகளுக்கு அப்பால் எமது சமூகப் பிரச்சினைகளைப் பற்றி சிந்திக்கும் திசையிலும் எம்மை மிகத்திறமையாக அவர் எடுத்து செல்வார். அப்போது அவரின் பரந்த அறிவையும ஆழமான சமூக உணர்வையும் நாம் கண்டோம்.

எமக்கு அவற்றை புரிய வைப்பதற்காக சிறந்த திரைப்படங்கள், நாவல்கள் அவர் படித்து ரசித்த கவிதைகள் பலரின் உலக அனுபவங்கள் என சகலவற்றையும் எந்தவித தடங்கலும் இன்றி மள மளவென எம்முன் எடுத்துச சொல்வார். அன்றைய கால கட்டத்தில யாழ் பல்கலைக்கழகத்திற்குள் நடந்தவைகள் இப்போதும் ஓர் திரைப்படத்தைப்போல் என் மனதிற்குள் ஓடுகின்றன.

இந்திய இராணுவத்தினரதும் அவர்களோடு சேர்ந்து இயங்கிய ஏனைய தமிழ் ஆயுத இயக்கங்களினதும் கெடுபிடிகள் மிக அதிகமாக இருந்ததால் விடுதலைப் புலிகள் இயக்கம் யாழ்ப்பாண பல்கலைகழகத்தையும் தமது மறைவிடங்களில் ஒன்றாக பாவித்தார்கள். புலிகள் இயக்கத்தின் நபர்கள் மட்டுமன்றி அவர்களின் ஆயுதங்கள் கூட பல்கலைக்கழகத்திற்குள் சில ஊழியர்களினதும் மாணவர்களினதும் உதவியோடு மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

இந்த உண்மை பல்கலைக்கழகத்தில் உயர் மட்டத்தல் இருந்து கீழ மட்டம் வரை பலருக்கும் தெரிந்திருந்தது. இதற்கு எமது மருத்துவ பீடமும் விதிவிலக்காக இருக்கவில்லை. இதனால் யாழ். பல்கலைக்கழகத்திற்குள் மாணவர்களிடையேயும் விரிவுரையாளர்களிடையேயும் புலிகளைப்பற்றி பேசுவது மிக மிக அச்சம் நிறைந்ததாக காணப்பட்டது. இந்த அச்சத்தின் காரணமாக அன்று புலிகள் இயக்கம் தான் சில மருத்துவபீட மாணவர்களின் உதவியுடன் மெடம் ராஜினி அவர்களை சுட்டுக் கொன்றது என்ற உண்மையைப்பற்றி எவரும் வெளிப்படையாக பேசத் துணியவில்லை. அது மட்டுமன்றி அக்கொலையைச் செய்தது இந்திய இராணுவம் அல்லது அவர்களோடு நிற்கும் ஏனைய ஆயுதக் குழுக்களில் ஒன்று என்ற பொய்யான கருத்தையே பலரும் பரப்ப முயற்சித்தனர்.

மெடம் அவர்கள் கொலை செய்யப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் இருந்தே புலிகள் இயக்கத்தின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் மருத்துவ பீட மாணவர்களின் உதவியுடன எமது வளாகத்திற்குள் நுழைந்து அவரை வேவு பார்த்தார்கள். மெடத்தோடு நெருங்கிப் பழகிய மாணவர்கள் பலருக்கு இவ்விடயம் தெரிந்திருந்தும் அதை எவ்வாறு வெளியிடுவது என்ற அச்சம் அவர்களிடம் காணப்பட்டது. அதே நேரம் இக்கொலையாளிகளை உள்ளே கூட்டிவந்த சில மாணவர்களும் கூட மெடத்தோடு மிக நெருக்கமாக பழகிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் முக்கியமான இருவரை நான் இங்கு பெயர் குறிப்பிட விரும்புகிறேன்.

அவர்களில் ஒருவர் வடமராட்சியை சேர்ந்த சூரி எனப்படும் சூரியகுமாரன் மற்றவர் முல்லைத்தீவைச் சேர்ந்த தர்மேந்திரா என்பவர்களாவர். புலிகள் இயக்கத்தின் உளவாளிகளும் கொலைகாரர்களும் சூரியோடும்,தர்மேந்திராவோடும் மருத்துவபீட வளாகத்திற்குள் நின்று கதைத்து பேசுவதும் வளாக சிற்றுண்டிச் சாலையில் தேனீர் அருந்துவதும் அப்போது மிக வெளிப்படையான நிகழ்ச்சிகளாக இருந்தன. புலிகளின் சாவகச்சேரி பொறுப்பாளர் கேடில்சின் சகோதரரான காண்டீபன் என்னும் பிரபல கொலையாளியும்கூட தர்மேந்திராவோடு தேனீர் அருந்துவதை நான் பலமுறை நேரடியாகப் பார்த்திருக்கிறேன்.

1989 செப்டெமபர் 21ம் திகதியன்று, 2வது எம்.பீ.பீ. எஸ் பரீட்சையின் இறுதி அங்கம் முடிவடைந்து மெடம் வெளியே வரும்வரை காத்திருந்த புலிகளின் உளவாளிகளில் ஒருவன் வீதியிலே தயாராக நின்றிருந்த கொலையாளிக்கு இரகசியமாக சிக்னல் கொடுத்தான். அதைச் செய்தவன் வேறு யாருமல்ல. அங்கு பணியாற்றிய பாதுகாப்பு உத்தியோகத்தர் செல்வக்குமார் என்பவனே.

மெடம் தனது சைக்கிளில் வளாக பிரதான வாசலால் வீதிக்கு இறங்கியதும் அவரை சைக்கிளில் பின் தொடர்ந்த கொலையாளி அவரது தலையின் வலப்பக்கத்தில் முதல் வேட்டைத் தீர்த்தான். பின்னர் அவர் கீழே விழுந்ததும் இன்னும் இரண்டு தடவைகள் அவர் தலையில் சுட்டுவிட்டுச் சென்றான். இந்த கொலையாளி யார் என்பதையும் நான் இங்கு சொல்லவேண்டும். புலிகளின் உளவுப்பிரிவில் பணியாற்றியவரும் கொலையாளியுமான பொஸ்கோ என்பவனே அவன். பொஸ்கோவை சாதாரண மக்களில் பலருக்கு தெரியாது.

ஆனால் மெடம் கொல்லப்படுவதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே பொஸ்கோவினதும் இன்னும் பல சந்தேகமான நபர்களினதும் நடமாட்டம் மருத்துவ பீடத்திற்குள் அதிகரித்திருந்தது.

பொஸ்கோவிற்கு வயது 30-35 இடையில் இருக்கும். எப்போதும் மற்றவர்களை சந்தேகத்தோடு குரோதத்தோடும் பார்க்கும் அவனது விறைப்பான முகமே அவனைக் காட்டிக் கொடுத்து விடும்.

இந்த பொஸ்கோ, சூரியோடும், தர்மேந்திராவோடும் அமர்ந்து வளாக சிற்றுண்டி சாலையில் தேனீர் அருந்துவதை நானும் பல மாணவர்களும் கண்டிருந்தோம். முதலில் எனக்கும் இவன் யார் என்று தெரயாது. எம்மோடு படித்த ஒரு மாணவனே எங்களுக்கு பொஸ்கோ யார் என்ற உண்மையைச் சொன்னான்.

மருத்துவ பீடத்திற்குள் இவனின் நடமாட்டம் பல தடவைகள் இருந்ததை நானும் சக மாணவர்களும் கண்டிருந்தோம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இக்கொலை நடக்கும்போது அச்சம்பவத்தை நேரில் பார்த்த ஓர் மாணவன் இன்னும் உயிருடன் இருக்கிறான். அந்த மாணவனும் நானும் ஒன்றாக திரியும்போதும்கூட பல தடவை பொஸ்கோவை நாம் கண்டிருக்கிறோம். அன்று அந்த மாணவனும் நாங்களும் இணைந்து, "புலிகள் இயக்கமும், அதன் கொலையாளி பொஸ்கோவும், அவனுக்காக உளவு வேலை செய்த சூரியகுமாரனும் தர்மேந்திராவும்தான் மெடத்தின் கொலைக்கு பொறுப்பு" என்று கூறியிருந்தால் நாங்கள் ஒருவரும் இன்று உயிருடன் இருக்கமாட்டோம்.

எனவே என் சக மாணவன் கண்ணால் கண்ட அந்தக் கொலையை யாரிடமும் வெளியே சொல்லாதே என எச்சரித்தவர்களில் நானும் ஒருவன் மெடம் கொல்லப்பட்ட மறுதினம் அவரின் உடல் மருக்குவ பீடத்திற்கு கொண்டு வரப்பட்டபொழுது யாழ். பல்கலைக்கழகத்தின் பல மூத்த விரிவுரையாளர்கள் அங்கு சமூகமளிக்கவில்லை. ஏன்..? காரணம் அவர்களுக்கும் இக்கொலையை செய்தவர்கள் யார் என்று நன்றாக தெரியும்.

சூரி, தர்மேந்திரா ஆகிய இருவரோடும் நெருங்கி பழகியவர்களும், புலிகளின் கொலைகார அரசியலுக்கு ஆதரவாக இருந்த பல மருத்துவபீட மாணவர்களுககும் இந்த உண்மை நன்கு தெரியும்.

மெடம் கொல்லப்பட்டு விட்டார் என்ற செய்தி மருத்துவ பீடத்திற்குள் பரவியதுமே சூரி, தர்மேந்திரா உட்பட அவர்களின் நண்பர்களின் முகங்களை நான் பார்த்தேன். அவர்களின் முகங்களே உண்மையை தெளிவாக வெளிப்படுத்தின. அவர்களைக் காட்டிக் கொடுத்தன.

எனது கண்களைக்கூட அவர்களால நேரடியாக பார்க்க முடியவில்லை. தங்களுக்கு கல்வியை போதித்து வழிகாட்டி, எதிர்கால மாணவ சமூகத்திற்கு கலங்கரை விளக்காக நின்ற அந்த ஒப்பற்ற மேதையை சுட்டுக் கொன்றுவிட்டு அவர்கள் இன்று வெளிநாடுகளில் சுகம் அனுபவிக்கிறார்கள் சூரியகுமாரன் இன்று இங்கிலாந்தில் வைத்தியசாலை ஒன்றில் வேலை செய்கிறான். அன்று அந்த தாயின் இரு குழந்தைகள் அநாதையாக்கிய இக்கொலைத்திட்டத்தின் பிரதான சூத்திரதாரிகளில் ஒருவணாகிய இவன், இன்று தான் உயிர்களைக் காப்பாற்றும வைத்தியனாக வேஷம் போடுகிறான்.

இவர்கள் நாளைய சமூகத்தில் பெரிய மனிதர்களாக உலவ நாம் அனுமதிக்கலாமா? இந்த நாகரீக உலகத்தின் முன்னால் இவர்களை நிறுத்தி அம்பலப்படுத்த வேண்டாமா. நிச்சயம் அதை நாம் செய்ய வேண்டும்

எனது அன்புக்குரிய சக மாணவர்களே நாம் நீண்டகாலம் மௌனமாக இருந்துவிட்டோம் எமது கண் முன்னால் நடத்தி முடிக்கப்பட்ட இந்த அநியாயத்தை மூடி மறைக்க புலிகளும் அவர்களுக்கு ஒத்து ஊதுபவர்களும் இன்னமும் முயற்சி செய்கிறார்கள்.

ஆனால நடந்த உண்மை வரலாற்றில் புதைக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே நான் இங்கு இதைப் பதிவு செய்கிறேன். இது தொடர்பாக நீங்களும் உங்களின் மனட்சாட்சியின் அடிப்படையில் உண்மையை சமூகத்தின் முன் வைக்க கோரிக்கை விடுக்கிறேன.

1989ம் ஆண்டில் யாழ்.
மருத்துவ பீட மாணவன்

## ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா

### கட்சியின் அடிப்படை நிலைப்பாடுகள்

வெளியீடு:- 27 இன்- தொடர்ச்சி

4. இதேபோலவே, மறுபுறம் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள நியாயமான ஜனநாயக முற்போக்கு சக்திகளில் பலரும் சிங்கள ஆட்சியாளர்கள் மற்றும் பேரினவாதிகளின் செயற்பாடுகளினால் நம்பிக்கை இழந்த நிலையில், விரக்தி அடைந்த நிலையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைய்ய (பிரிவினை உட்பட) அங்கீகரித்தல் என்ற பெயரில் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ புலிகளை ஆதரவளிப்பவாகளாகிறார்கள். இதன் மூலம் அவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் தனிமைப்படுவதோடு புலிகளின் பாசிச பயங்கர வாதத்துக்கும் துணை போகிறவர்களாகின்றனர். ஐக்கிய இலங்கையில் மாநில சுயாட்சி அமைப்புக்கள் உருவாக்கப்படுவதற்கான போராட்டத்தை நடத்துவதிலிருந்து விலகிவிடுகின்றனர்.

5. இலங்கை அரசு சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மட்டுமல்ல அதில் தமிழர்களுக்கும் பிரிக்க முடியாத பங்குபாத்தியதை உரியதாகும். இலங்கை அரசின் அதிகாரம் சிங்களப் பெரும்பான்மையினரின் கைகளுக்குள் அகப்பட்டுப் போய்விட்டது என்பற்காக அதனை சிங்கள அரசு என வரையறுத்து விட்டு தமிழர்கள் கண்ணைமூடி ஒதுங்கி விடமுடியாது.

சிங்கள பௌத்த பேரினவாதிகள் அவ்வாறானதொரு நிலைமையை சாதிப்பதற்கே முயல்கின்றனர். இலங்கை அரசின் மீதான தமிழர்களின் இறைமையை அறவே நிரந்தரமாக இல்லாதொழிப்பதே சிங்கள பேரினவாதிகளின் நோக்கம். அதேபோல மறுபுறம் தமிழ் அமைப்பே தமிழர்களின் தேசிய அரசு என்றும் நிறுவ முற்படுகின்றனர். இதனால்த்தான் தமிழர்களின் அரசியல் தலைவர்கள் அனைவரிடமும் இலங்கையின் மத்திய ஆட்சியமைப்பில் (நாடாளுமன்றத்தில் மற்றும் அமைச்சரவையில்) தமிழர்களின் பங்குரிமை பற்றி சரியான தெளிவின்றியும் அது பற்றிய கோரிக்கைகளின்றியும் உள்ளனர்.

கடந்த காலங்களில் இலங்கையின் ஆட்சியமைப்பில் பங்கு பற்றிய தமிழ் பிரதிநிதிகள் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பாக குரலெழுப்பாது தமது தனிப்பட்ட பதவி நலன்களுக்காக சிங்கள இனவாத ஆட்சியாளர்களுடன் சமரசம் கொண்டனர் என்பதால் தமிழர்கள் எக்காரணம் கொண்டும் எந்தச் சூழ்நிலையிலும் ஆட்சியமைப்பில் பங்குபற்றக் கூடாது என்ற அபிப்பிராயம் வளர்க்கப்பட்டிருக்கின்றது. இது ஆட்சியில் தமிழர்களுக்குரிய பங்குரிமையை நிராகரிப்தற்கு சிங்களக் கட்சிகளுக்கு மிகவும் வாய்ப்பாகிப் போய்விட்டது.

காலத்துக்காலம் கண்துடைப்புக்காக வடக்கு கிழக்கைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஏதோவொரு ஓரத்தில் ஒரு மந்திரிப் பதவியைக்கொடுத்துவிட்டு நழுவிக்கொள்ள வாய்ப்பளித்திருக்கின்றது. வேலைவாய்ப்புக்களுக்கும், அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகளுக்குமாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்கதவுகளால் சென்று சிங்கள மந்திரிகளிடம் கெஞ்சி நிற்கும் நிலை ஏன் ஏற்படவேண்டும். இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கும் சிங்களவர்களைப் போலவே ஆட்சிபுரியும் அமைச்சரவையில் பாத்தியதையுண்டு. அரச நிர்வாக அமைப்புக்களில் உரிய பங்கைக் கோரும் உரிமையுண்டு. அரச நிதியில் உரிய பங்கைக் கோரும் உரிமையுண்டு.

அகதிகளான தமிழர்களுக்கும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை அரசிடமிருந்து நிவாரணம் கோருவதுவும் புனர் நிர்மாணங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை இலங்கை அரசின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து கோருவதுவும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து அதிக நிதி ஒதுக்கித் தரும்படி தமிழ் பா. உக்கள் கேட்பதுவும், பாஉக்கள் கைநீட்டி சம்பளம் வாங்குவதுவும் பா. உ. என்ற அடிப்படையில் பல மில்லியன் பெறுமதி வாய்ந்த ஆடம்பர வாகனங்களை சில ஆயிரம் ரூபாக்களுக்கு சலுகைகளாகப் பெறுவதுவும் இலங்கை அரசின் மீதான தமிழர்களின் உரிமையின் அடிப்படையில்தான் அமைகின்றன. எந்த வகையான போராட்டமாயினும் இலங்கை அரச அமைப்புக்களின் மீது தமிழ் மக்களுக்கு உரிய பங்கு பாத்தியதை நிலைநிறுத்துவதே தமிழர்களின் போராட்டத்தின் சாராம்ச இலக்காகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்